[illegible] 1922-23

വാല്യം 13 ലക്കം 12

SL
RGS [illegible], MIMD.
N23.13.12
186731

ரிஜிஸ்டர் எம். 916.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்
வேதாந்த விசாரம் செய்யும்
ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை.

டாக்டர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.,
பத்ராதிபர்.

ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதரிசி.

ஸபையின் 1922—1923௵ செப்டம்பர்மீ.

ஸம்புடம் 13.] ருதிரோத்காரி௵ புரட்டாசிமீ [ஸஞ்சிகை 12

1. பத்ராதிபரின் குறிப்புகள் 415
2. ஆழ்வார்பக்தி. 422
3. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமும் வைதிகமர்யாதையும்.
வேளுக்குடி. சேஷாத்ரி யாசார்யர் ... 427
4. திருமங்கையாழ்வாரும் ஆராவமுதனும். 431
5. இரண்டாந்திருவந்தாதி.
வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ... 435
6. ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸபை-திருவஹீந்திரபுரம்.
அ. வேதாந்தா சார்யார் ... 444
7. ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம். ... 447
பண்டித பூஷணம் வித்வான் சே. நரஸிம்மாசாரியர்.
8. சில சிலா சாஸனங்கள்.
ஆர். ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் ... 449
10. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, நாகபட்டணம் 453

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால்
ப்ரசுரம் செய்யப்பட்டது.

மதராஸ் : கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

வருஷ சந்தா ரூ. 3—0—0] [ஸஞ்சிகை 1 அணா.

விளம்பரம்.

தீபிகை [illegible], விஷயம் [illegible] தீபிகை, விஷய மாய் தெரிந்துகொள்ளவேண்டிய விபரத்துக்கு ஆகும் கடிதங்கள் எல்லாம் ஸபையின் கார்யதரிசிக்கு 2/11 [illegible] வேப்பேரிபோஸ்டு, என்ற விலாஸத்துக்கு அனுப்பவேணும் [illegible]

வ்யாஸம் எழுதுகிறவர்கள் [illegible] நடையில் எழுதி பிரமாணங்களை கீழ்க்குறிப்புகளாக [illegible] ஸ்லோகங்களுக்கும் வாக்கியங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பு எழுதிவிடவேணும். வ்யாஸங்கள் நேரில் அச்சாபீசுக்கு அனுப்பப்படுவதால் எழுத்துகளை ஸ்பஷ்டமாகவும் விஸ்தாரமாகவும் கடுதாசியின் ஒருபக்கத்திலேயே எழுதி அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

மெம்பர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் விலாஸத்துக்கு ஸஞ்சிகைகள் அப்போதைக்கப்போது வெகு ஜாக்கிரதையுடன் அனுப்பப்பட்டு வருகின்றன. ஸஞ்சிகைகள் வேண்டிய அளவுதான் அச்சிடப்படுவதால் தபால் மூலமாகவோ ஸரியான மூகவிலாஸம் இல்லாததினாலோ சேராதஸஞ்சிகைகளுக்கு நாங்கள் உத்திரவாதமாகமாட்டோமென்று விநயத்துடன் தெரிவிக்கிறோம்.

பழைய ஸஞ்சிகைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஸ்வல்ப்பமாக இருப்பதாலும், தேவை ஜாஸ்தியாக இருப்பதாலும், வேண்டியவர்கள் தாமதமின்றி எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

கார்யதரிசி.

விப்ர நாராயணன்

அல்லது

தொண்டரின் வெற்றி.

இது ஆர். ரங்கநாத ஐயங்காரால் செய்யப்பட்ட ஓர் அழகான தமிழ் நாடகம். தொண்டரடிப்பொடியாழ்வாருடைய பால்ய சரிதம், அவருக்கு பகவானிடத்தில பக்தி உண்டானதும், அவருக்கு உண்டான கஷ்டங்களும், பகவான் பக்தனை கைவிடாமல் காப்பாற்றினதும் வெகு அழகாய் நிரூபித்து இனிய பாட்டுகளுடன் பார்க்கிறவர்களுக்கும், கேட்கிறவர்களுக்கும் மனதைக் கவரும்படி எளிதான தமிழில் நாடக ரூபமாய் எல்லோருக்கும் உபயோகப்படும்படி எழுதப்பட்டிருக்கிறது. கடித்தால் மனோகரமாக இருக்கும் இதன்விலை அணா 6. வேண்டியவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி:—ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 13] ருதிரோத்காரி ஹு புரட்டாசி மீ [ஸஞ்சிகை 12

"த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா"।

[ஸ்ரீ பாகவதம்-1-9-38.

பத்ராதிபரின் குறிப்புகள்.

'ஸ்வாத்யாயேந வ்ரதைர் ஹோமைஸ் த்ரைவித்யேநேஜ்யயா ஸுதை:। மஹாயஜ்ஞைஶ்ச யஜ்ஞைஶ்ச ப்ராஹ்மீயம் க்ரியதே தநு:॥' என்று ஆதிதர்மப்ரவர்த்தகரான மனு நிஷ்கர்ஷித்தார். இதன் அர்த்தம்:—ப்ராஹ்மணனுடைய சரீரமானது, வேதாத்யயநாதிகளாலும், வ்ரதாநுஷ்டான ங்களினாலும் ஹோமங்களினாலும் சாஸ்த்ரார்த்தங்களை அநுபவ அநுஷ்டான பர்யந்தங்களாக க்ரஹிப்பதினாலும், ஸ்வதந்த்ர சேஷியான பகவானுடைய ஆராதனத்தினாலும் தர்மம் பகவதாராதனம் முதலியவற்றின் பொருட்டுச் செய்யப்படும் புத்ரோத்பத்தியினாலும், பஞ்சமஹா யஜ்ஞங்களினுடையவும், மற்ற சாஸ்த்ரீயங்களான யஜ்ஞங்களினுடையவும் அநுஷ்டானங்களினாலும், செய்யப்படுகிறது'—என்று. இங்கு 'ப்ராஹ்மீயம் தநு:' என்றது ப்ராம்மண ஜாதியில் பிறந்ததை மட்டும் குறிப்பதன்று; ப்ரும்மஜ்ஞான யோக்யனாய் 'ஶ்ருதிஸ்ம்ருதிவிஜ்ஞ: ஸவை ஶ்ரோத்ரிய உச்யதே' என்றபடி பரம ஆஸ்திகனாய் ஆத்மகுண பூர்த்தியுடையவனாய் பரமபுருஷார்த்தமான பகவத்

18674.

ப்ராப்தியைச் சிந்திக்கும் ஸத்வோத்தரனைப்பற்றச் சொன்னது. ஊணுமுறக்கமுமே பெரும்பயனென்று பறக்கும் ப்ராம்மணப்பதருக்கு இவ்வித ஸாத்விக சரீர அமைப்பு இல்லை யென்னலாம். பிறவியிலிருந்திருப்பினும், ‘ஆஹார ஶுத்தௌ ஸத்வ ஶுத்தி:’ (மனது ஊணின் ஸ்வபாவத்துக் கிணங்க மாறுபடுகிறது) என்ற ச்ருதிவாக்யத்தின்படியே, இவன் தாயதனமாகப் பெற்றதை யிழந்துவிட்டா னென்பது திண்ணம். இவனுடைய ஆசாரம் முதலியவற்றின் குறைவினாலும், வரம்பற்ற ஊணினாலும் இவன் ஸந்ததி பெறும் ஸ்வரூப நாசத்தை ப்ரத்யக்ஷத்தில் காண்கின்றோம். ஸத்சாஸ்த்ரங்களைக் கற்காவிட்டால் நன்றிது தீயதிது வென்னும் விவேகமுண்டாகாது. இவன் கற்றறிந்ததற்கு ப்ரயோஜனம் இவனுடைய நடவடிக்கைகளில் காணப்படவேண்டும். அன்றேல் அக்கல்வி வீண்சுமையே. இதன் பரமப்ரயோஜனம், தானும் மற்றெதுவும் பகவானுடைய பொருள்களே யென்றுணர்ந்து அவ்வுணர்வின் கார்யங்களாகிய ஸாக்ஷாத் பகவதாராதனம் செய்தல், தேவர் ரிஷிகள், பிதிர்க்கள் மனிதர் பூதங்கள் இவர்களைப்பற்றிய பஞ்சமஹாயஜ்ஞம், ஆத்மஹிதத்துக்காக விதிக்கப்பட்ட நித்யநைமித்திக கர்மங்கள், மற்றை யாகஹோமங்கள் முதலியவற்றைப் பலாபேக்ஷாதிகளின்றிப் பகவதாராதன ரூபமாகவே செய்தல், கேவலம் காமபோகத்துமட்டு மல்லாமல் தர்மப்ரஜாபி வ்ருத்தியின் பொருட்டு விஹிதங்களான வரம்புகளுக்கும் நியமங்களுக்கு முட்பட்டு விவாஹாதிகளைச் செய்தல், பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட ஸாத்விக ஆஹாராதிகளைக் கொண்டு தர்மத்துக்கு முதல் ஸாதனமான சரீரத்தை ரக்ஷித்தல், முதலியனவே. இந்நியமங்களை ஒருவாறு பற்றி வந்ததினால் தான் ப்ராம்மணருக்கு இதுவரையில் ஒரு அஸாதாரண யோக்யதையும், ஏற்றமும் நடந்துவந்திருக்கிறது. சில வர்ஷங்களுக்குமுன் பம்பாயில் பெரிய பதவி வஹித்துவந்த ஸர் ஜார்ஜ் பர்ட்வுட் (Sir George Birdwood) என்பவர் 711 - முதல் 1757 வரை வரையில் 1000 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாய் இந்தியாவில் நடந்த மஹத்தான அராஜகத்தில் ஹிந்து ஸமூஹாதிகள் குலையாமல் ரக்ஷிக்கப்பட்டதற்கு காரணம் ஒன்றே. அதாவது மனு முதலிய தர்ம சாஸ்த்ரங்களை யநுஸரித்து ப்ராம்மணர் நடத்திவந்த அரியமருந்தான ஜாதிநியமமே’ என்று வரைந்தார். சரீரத்தின் ஸ்வபாவத்தால் மனப்பான்மை மாறுவதும், மனம்போன சுயேச்சையாய் விட்டு ஆஹாராதி நியமங்களைக்கடந்து சரீர ஸாத்விகத்தை யிழந்து அதன் பயனாக மனது மேன்மேலும் இருள் மண்டுவதும் இயற்கை யென்பதைப் பௌதிக விசாரகர்களும் (scientists) ஒப்புக்கொள்ளுகிறார்கள். இப்படிக் கெட்ட அதமர்கள் ஜன்மந்தோறும் அஸுரப்ரக்ருதிகளாய்த் தமது மூடத்தன்மையைப் பெருக்கி ஸர்வர்களுக்கும் சரண்யனாகிய ஸர்வேச்வரனைப் பெறுமலே நரகவாழ்விலேயே நீடூழி கிடக்கப்பார்த்தார்கள் என்று ஹிதைஷியான பகவானே அநுதபித்

தான். இப்படிக் ‘கர்ப்பதாரணம் முதல் மரணாந்தமாக’ என்று ஏற்பட்டிருக்கும் ஸம்ஸ்கார விசேஷங்களினாலும் ஆஹார விவாஹாதி நியமங்களினாலும் ஒரு சேதனனுக்கும் அவனுடைய மக்களுக்கும் ஒரு விசேஷ யோக்யதை யுண்டாகிறதென்று சாஸ்த்ரம் சொன்னதை, இதற்கடுத்தாப்போல் குறிப்பிட்ட மேல் நாட்டு வைத்ய ஆராய்ச்சி ஸங்க்ரஹத்தில் ஒருவாறு கண்டு தெளியலாம். அதனால் அநுலோமம் ப்ரதிலோமம் என்று விவாஹ விஷயமாய் சாஸ்த்ரங்கள் பண்ணியிருக்கும் வ்யவஸ்தையும் ஆதாரவுபறக் காணப்படுகிறது.

* * * * * *

சென்னைச் சட்டசபையார் சிறிது காலத்துக்குமுன் நமது நாட்டு ஆயுர்வேத யுநானி வைத்திய முறைகளைப்பற்றி விசாரணைசெய்ய நியமித்த கம்மிட்டியின் ரிபோர்ட்டு துரைத்தனத்தாரால் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதில், அக்கம்மிட்டியின் கார்யதர்சியாகிய ஸ்ரீமான் காப்டன் ஜி. ஸ்ரீநிவாஸ மூர்த்தி பி. ஏ. பி. எல்., எம். பி., பி. எஸ்., என்பவர் இந்திய வைத்திய சாஸ்த்ரமும் அதன் ப்ரயோகமுறையும் (The Science and Art of Indian medicine) என்று தலைப்பிட்ட விவரமான வ்யாஸத்தை எழுதிச்சேர்த்திருக்கிறார். இதனடியில், சென்ற ஐரோப்பிய மஹாயுத்தத்தின்போது காயம்பட்டு ரக்தமிழந்த போர்வீரர்களுக்கு வேறு மனிதர்களின் ரக்தத்தை தேஹத்திலேற்றி அநேகர்களை வைத்திய நிபுணர்கள் பிழைப்பித்திருக்கும் சிகித்ஸை ப்ரகாரத்தைக் குறிப்பிட்டு இங்ஙனே ஸங்க்ரஹிக்கிறார். அதாவது:—“ ரக்தம் கொடுப்பவனுக்கு தாதா என்றும் பெற்றுக்கொள்ளுகிறவனுக்குப் பெறுவோன் என்றும் பெயர். இப்படித் தன்னுடம்பின் ரக்தத்தைத் தாராளமாக உதவியது பிறர்க்குதவும் தர்மபுத்தியின் பலம்......................இந்த ரக்தப்ரதான சிகித்ஸை வெகு ஜாக்ரதையுடன் நிபுணர்களால் கையாடப்பட்டதெனினும், காயம்பட்டவர்களில் சிலர் திடீரென்று இறந்தனர். அதற்குக் காரணமும் ஏற்படவில்லை. சிறிது காலம் சென்றபின், ஒவ்வொருவர் ரக்தத்திலும் ஸ்வாபாவிகமான சில விசேஷ குணங்களிருக்கின்றனவென்றும், தாதாவினுடைய ரக்தம் பெறுவோனுடைய ரக்தத்துக்கு அநுகூலமில்லாத காரணத்தினால் தான் கீழ்க்கூறியவண்ணம் சிலர்க்குத் திடீரென்று விபத்து நேரிட்டதென்றும் தெரியவந்தது. ஸெண்டு பார்த லோம்யூ ஆஸ்பத்ரியைச் சேர்ந்த டாக்டர் ஜப்ரே கெய்ன்ஸ் (Dr. Geoffrey keyness, M. D.) என்பவர் ‘ ஒவ்வொரு குறிப்பிட்ட ஜன ஸமூஹத்தையும், இதனால் நான்கு பிரிவுகளாகப் பிறிக்க ஸாத்யமாகிறது. இப்பிறிவுகளின் ஸங்க்யைகளும் ஒரு கணக்கின்படியே இருக்கின்றன. இவைகளில் எல்லாவற்றிலும் குறைவான ஒரு வகுப்பு 100 - க்கு ஒரு ஆஸாமி வீதமுள்ளது. இவர்களுடைய ரக்தம் இவர்கள் வகுப்பைச்சேர்ந்த மனிதர்களுக்கு மட்டும்தான் உதவுகிறது; மற்றவகுப்பாருக்கு இதை உபயோகப்படுத்தக் கூடுகிறதில்லை. ஆனால் எந்தவகுப்பாருடைய ரக்தமும் இவ்வகுப்பாருக்குப் பயன்படுகிறது. நல்ல வேளையாய்

மிகுந்த ஸங்க்யையரான (100-க்கு 44-ஆஸாமிகள் வீதமுள்ள) இரண்டாவது வகுப்பாருடைய ரக்தம் எல்லாருக்கும் உதவக்கூடியதாயிருக்கிறது; ஆனால் இவ்வகுப்பாருக்குமட்டும் இதைச்சேர்ந்தவர்களுடைய ரக்தத்தையேதான் செலுத்தமுடிகிறது. இவ்விருவர்க்கும் இடையிலுள்ளவர்கள் (100-க்கு 15 வீதம்போல் ஆஸாமிகள்) பொதுவாய் வேறு இரண்டு வகுப்பினராய்க்காணப்படுகிறார்கள். இவர்களுடைய ரக்தம் பரஸ்பரம் விரோதகுணமுள்ளவைகளாகவே காணப்படுகின்றது. ஆனால் இவர்களில் ஒவ்வொரு வகுப்பாருடையவும் ரக்தம் தங்கள் கோஷ்டிக்கும், கீழ்க்கூறிய முதல் வகுப்பினர்க்கும் ப்ரயோஜனப்படுகின்றது. இத்தகைய பிறிவைப் பரீக்ஷை மூலமாய்ச் சிலநிமிஷங்களுக்குள் நிஷ்கர்ஷித்து விடலாம். எனவே, இந்த சிகித்ஸைகளில் கீழ்க்கூறிய இரண்டாவது வகுப்பாருடைய ரக்தத்தையேயாவது, அல்லது பெறுவோன் வகுப்பைச்சேர்ந்த ஸஜாதீயருடைய ரக்தக்தையேயாவதுதான் உபயோகப்படுத்துவது என்னும் ஸம்ப்ரதாயம் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. இவ்விதமாக, விருத்தகுணமுடைய ரக்தத்தின் ப்ரயோகத்தினால் மரணம் ஸம்பவிப்பதென்பது ஒழிந்துபோய்விட்டது. இப்பிறிவு வ்யாதி முதலிய யாத்ருச்சிகமான காரணங்களினால் உண்டானதல்லவென்றும் ஜன்மஸித்தமாய் ரக்தத்தின் ஸாராம்சத்திலுள்ள நியதமான ஏற்றக்குறைவினாலேயே ஏற்பட்டதென்றும் நம்பப்படுகிறது. அனால், இவ்வேற்றக்குறைவின் பரிமாணம் இவ்வளவென்று இன்னும் தீர்மானமாகவில்லை. சிசுவின் ரக்தம் அது பிறந்த வகுப்பினுடைய ரக்தஸ்வபாவத்தையே உடையதாகவிருக்கிறது; ஆனால் அது தாயாரின் வகுப்பைக் கொள்ளுகிறதென்னும் நியமத்தைக்காணோம்' என்று, கண்டு எழுதுகிறார்"— என்று. ஆசாரச்சீர்திருத்தமென்னும் வ்யாஜத்தைக்கொண்டு ப்ராம்மண்யாதிகளை ஒழிக்கப் பார்ப்பவர்கள் இதைச் சற்றுக் கவனிப்பார்களா?

*　　　*　　　*　　　*　　　*

சென்னை ஹிந்துமத ஸ்தாபன மசோதாவைப்பற்ற ராஜப்ரதிநிதி (Viceroy)யின் தீர்மானம் இன்னும் ஏற்படவில்லையாயினும், பலவிதவதந்திகள் மட்டும் உலாவிவருகின்றன. ஸிம்லாவுக்குப்போய் பேட்டிகண்டு வந்தவர்கள், மசோதா அடிபட்டுப்போனாலும் இல்லாவிட்டாலும் அதில் சில விசேஷ மாறுதல்களும் ஸாதகங்களும் அவச்யம் ஏற்படக்கூடுமென்று சொல்லிவந்தார்கள். மசோதாவை ஆதரிக்கும் கக்ஷியினர் தற்போது கொஞ்சம் உத்ஸாஹத்தோடு இருப்பதாய்க் காணப்படுகிறது. இம்மசோதா ஜநங்களுக்குப் பிடிக்காவிட்டால் ஜநங்களுடைய ப்ரதிநிதிகளே அடுத்த சட்டச்சபையில் அதை மாற்றிக்கொள்ளட்டும் என்று சென்னை கவர்னரவர்கள் தன்னைப் பேட்டிகண்டவர்களுக்குச் சொல்லிவிட்டதுபோல் ராஜப்ரதிநிதியும் தீர்மானித்துவிடுவாரென்றும், அடுத்த டிஸம்பர் மாதத்தில் அவர் சென்னைக்கு விஜயம்

செய்யப்போவதால் அப்போது மந்திரிமார்களோடு கலந்துகொண்டு முடிவு செய்வாரென்றும் இப்படி பஹுவிதமாய்ப் பேசப்படுகிறது. எப்படி முடியுமோ! ஒன்று மட்டும் நாம் சொல்லத்துணிவோம். சென்னை கவர்னர் பேட்டியிலாவது ஸிம்லா பேட்டியிலாவது மற்றெப்பொழுதாவது ஸ்ரீவைஷ்ணவ மடாதிபதிகளும், அவர்களுடைய சிஷ்யகோடிகளும், தமது அலுவல்களைப் போதுமான முன்ஜாக்ரதையுடன் செய்யவில்லையென்பதே. "இன்னைக்கு விடிந்தால் தாழ்வாரத்துக்குத் தானே விடிகிறது" என்று எண்ணும் கணக்கில் திருப்பதி தேவஸ்தானம், பண்டார ஸந்நிதிமடம், முதலிய ஸ்தாபநாதிகாரிகள் விசேஷ முயற்சிகளைச் செய்து வந்ததைப்பார்த்துச் சோம்பியிருந்துவிட்டார்கள் போலும்! இங்கு ஒவ்வொரு ஸ்தாபனங்களுக்கும் தனித்தனியான ந்யாயங்களும் சரித்ரங்களுமுண்டென்பதைக் கவனிக்கவேண்டியது அவச்யம். உதாரணமாய்க் கோர்ட்டு மூலமாய் ப்ரிவி கௌன்ஸில் (Privy Council) வரையில் போய் திட்டம் (scheme) ஏற்பட்டுவிட்ட திருப்பதிபோன்ற ஸ்தாபநங்களின் ஸமாசாரம் வேறு; ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீவானமாமலைமடம் முதலியவைகளின் கதைவேறு. ஒவ்வொருவரும் தம்மைப்பற்றிய வரையில் இம்மசோதாவை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பதற்குக் காரணத்தைத் தகுந்த அளவில் தனியே வற்புறுத்த வேண்டாமா? இனியாவது அக்கரைப்பட்டவர்கள் விழித்துக்கொள்வார்களா? இம்மசோதா சட்டமானால், விளையக்கூடிய விபத்துக்களைச் சற்றுக் கணிசிப்பார்களா? ஆங்காங்கு தனிமையில் கோபத்தையும் வெறுப்பையும் காட்டினால் மட்டும் ஆவதென்ன? கோயில்களிலும் மடங்களிலும் ஊழல்களிருக்கின்றனவாம். அவற்றை இம்மசோதா திருத்துமா? வ்யாதியைவிட மருந்தன்றோ அதிக அபாயகரமாகவிருக்கிறது! ஜனங்களிற் பெரும்பான்மையரான சைவஸித்தாந்தங்கள் இம்மசோதா வேண்டுமென்கிறார்களாம்; இது உண்மையானாலும் ப்ராம்மணஸ்தாபநங்களைப்பற்ற எவராவது மந்திரிக் கக்ஷியினரின் உதவியை நாடினார்களோ? சென்னை ஜநப்ரதிநிதிஸபையில் ப்ராம்மணர்க்கு என்ன நடக்கும்? அவர்களுடைய மத உரிமையை ரக்ஷிக்கும் கடமை அரசாங்கத்தாருடையதன்றோ? அப்படியன்றோ புதுச்சட்டசபை நிர்மாணத்தின்போதே நமது மாக்ஷிமை தங்கிய மஹாசக்ரவர்த்தி ஆஜ்ஞாபித்தது? மஹாஜநங்களின் ப்ரதிநிதிகளென்று சொல்லிக்கொண்டு உத்யோகங்களுக்காகப் பறக்கும் கக்ஷிநிர்வாஹகர்களைத்தவிர மற்றப்ராம்மண இதரர்கள் இம்மசோதாவை ஆதரிப்பதாகவும் காணோம். ஸமீபத்தில் திருச்சியில் நடந்த ஜஸ்டிஸ் கக்ஷியாரின் மஹாஸங்கத்தில் ம-ள-ள-ஸ்ரீ பெத்தாச்சிசெட்டியார் பேசியதையும், அவரை மற்றவர்கள் அடக்கி மசோதாவை ராஜப்ரதிநிதி அங்கீகரிக்கவேண்டுமென்று தீர்மானித்ததையும் நமது நேயர்கள் பத்ரிகைகளில் வாசித்திருப்பார்கள்.

-அதுபோகட்டும். இனியிருக்கும் சிறிது போதைக்குள்ளாவது நமது மடா

திபதிகள் முதலியோர் தம்மைச்சுற்றியுள்ள க்ஷுத்ர ப்ரபஞ்சத்தை மறந்து தீர்க்க த்ருஷ்டியுடன் தமது கடமைகளைக் கவனிப்பார்களாக.

*   *   *   *   *

ஸ்ரீ அஹோபிலமடத்தில் தற்போது ஸ்ரீபாஷ்யாதி க்ரந்த காலக்ஷேபங்கள் வெகு விமர்சையாய் நடந்துவருகின்றதென்பதைக்கேட்க மிகவும் ஆநந்திக்கின்றோம். இதில் ஷை ஸந்நிதி சிஷ்யர்கள் அத்யந்தம் குதூஹலர்களாகத் தட்டில்லை. மடநிர்வாஹத்தில் இந்த அம்சம் இவ்வளவு த்ருப்திகரமாக இப்போது ஜ்ஞாபகத்துக்கு வரும் காலங்களில் நடந்ததில்லையாம். ஸ்ரீஸ்வாமியின் வைதுஷ்யமும் நிரங்குசமாயிருப்பதாகத் தெரியவருகிறது. இப்படி ஆச்ரித ஜனங்களுடைய உஜ்ஜீவனத்துக்கென்றே ஸந்யாஸாச்ரமத்துக்கு ஸ்வயமாய் விலக்கான த்ரவ்யார்ஜநாதிகளை யவலம்பித்தேனும் ஸ்ரீஸந்நிதி துரந்தரர்கள் பூர்வம் முதல் க்ருபாபரவசராய் ப்ரவ்ருத்தித்து வந்திருக்கும் ப்ரகாரத்தைக் காலஞ்சென்ற ஸ்ரீ. உ. வே. டி. ராஜகோபாலாசார்யர் எம். ஏ. பி. எல். ஸ்வாமி, நமது ஸபை ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யஸபையாய் அங்குரித்த காலத்தில், மஹா ஸங்கமொன்றில் அத்யக்ஷ ஸ்தாநம் வஹித்து, உபந்யஸித்ததைத் தீபிகையில் நமது நண்பர்கள் படித்திருப்பார்கள். இந்த ஸ்ரீஸ்வாமி ஆஸ்தானத்துக்கு எழுந்தருளின முதல் ஸ்ரீமடத்தினுடையவும் சிஷ்யர்களுடையவும் ச்ரேயஸ்ஸை கருதி அனேகத் திருத்தங்களைச் செய்தருளுவாரென்று எங்கும் எதிர்பார்க்கப்பட்டுவருகிறது. அதற்கிணங்க மடத்தின் லௌகிக வ்யாபாரங்களைப் பார்க்க திவானொருவரை ஸ்ரீஸ்வாமி நியமனம் செய்தது எங்கும் ஏககண்டமாய்க் கொண்டாடப்பட்டது. எந்த ஸ்தாபநத்திலும் மாமூலாய் ஸ்வலாப நிரதர்களாயிருக்கும் சிலர்க்கும் ஏதோ லாபமடையலாமென்றிருக்கக்கூடிய சில்லரை யநுபந்திகளுக்கும் இந்த மாதிரியான ஏற்பாடு பிடிக்காதுதான். அதைப்பற்றி ஸ்ரீஸ்வாமி கவலைப்படவேண்டியதில்லை. இந்த நியமனமானது ஒருநூதனமான ஏற்பாடாகையால், இதனால் மடநிர்வாஹத்தைச் சிறந்த நிலைமைக்கு கொண்டுவந்து காட்டவேண்டியது ஸ்ரீஸ்வாமியினுடையவும் திவானுடையவும் பொறுப்பாகும். திவானுக்கு அவச்யமான அளவில் ஸ்வாதந்த்ர்யத்தை ஸ்ரீஸ்வாமி கொடுத்து, அவர்செய்யும் ஏற்பாடுகளில் எந்தக்காரணத்தைக் கொண்டும் தலையிடாமலிருக்கவேண்டும். திவானும் த்ரிகரணத்தாலும் மடத்தின் அபிவ்ருத்தி யொன்றையே கருதி நடந்து ஸ்ரீஸ்வாமியின் ஹார்த்தமான விச்வாஸத்துக்குப் பாத்ரராக வேண்டும். இப்படி இருவரும் ஒத்துப்போனாலல்லது மடமாகிற 'வான்சகடம்' தட்டின்றிச் செல்லாது.

*   *   *   *   *

மற்றோர் விஷயத்தை விஜ்ஞாபிக்கின்றோம். மடம் என்னும் ஏற்பாடே நாடெங்கும் ஸஞ்சாரம் செய்து ஆங்காங்குள்ள சிஷ்யர்களுக்கு ஆத்மோஜ்

ஜீவனகரங்களான பஞ்ச ஸம்ஸ்காரம் பரந்யாஸம், க்ரந்தகாலக்ஷேபம் முதலியவற்றை ப்ரஸாதிப்பதற்காக. இவருக்குமுன் ஸ்வாமி வடக்கே ஒருப்ரதேசத்திலேயே சிரகாலம் தாமஸித்திருந்துவிட்டது மற்றவிடங்களிலுள்ள ததீயர்களுக்கு ஆச்வாஸகரமாக விருக்கவில்லை. ஆனால் ஸ்வதேசாபிமானம் ஸ்வஜநாபிமானம் என்னும் அபக்யாதிகளற்று விளங்கினதை அனைவரும் ச்லாகிக்கிறார்கள். அதற்குமுன் வெகுகாலமாய் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகள், வடதேசத்திலேயே என்றும் சோளதேசத்திலேயே, என்றும், அங்கங்கேயே நிலையாக யிருந்து விட்டார்கள். என்றமாதிரி கிளம்பிய பேச்சுகளும் நமது காதில் விழுந்திருக்கிறது. இனி இம்மாதிரியான வார்த்தைகளுக்கிடமிராதென்று நம்புகிறோம். மத்யஸ்தமான ஸ்தலமொன்றில் தகுந்த நியமங்களுடன் மடநிர்வாஹ ஆபீஸைத் திவான் பொறுப்பில் ஸ்தாபித்துவிட்டால், ஸ்ரீஸ்வாமிக்கு ஸஞ்சாரம் செய்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் ஏற்படும். பல ப்ரதேசங்களிலிருக்கிற சிஷ்யகோடிகளுக்கும் குறைந்தது இரண்டு வர்ஷங்களுக்கொரு முறையாவது ஸ்ரீ அழகியசிங்கர் ஸேவை கிடைக்கும். ஸ்ரீஸ்வாமிக்கும் ததீயர்களுக்கும் நெருக்கமான அநுபந்தமும் பாஸ்பர அபிமானமும் பெருகும்.

இதைப்போன்ற விஷயங்களை ஸ்ரீஸ்வாமியே ஆலோசித்துக்கொண்டிருப்பார் என்று எதிர்பார்க்கிறோம். 'ஸங்கேத ஹீதி ஈஹிதஃ ஸத்ருணை க்ஷவஸக்தஃ' என்று ஸ்ரீதேசிகன் காட்டிய நிலையில் 'சிறைவளர்க்கும் சிலமாந்தர் சங்கேதத்துக்கு'ப் பயப்படாமலும் ஸ்வல்பாநுகூல்யங்களைப் பாராட்டாமலும் ஸ்ரீஸ்வாமி தமக்குக்கிடைத்திருக்கும் இம்மஹாகைங்கர்ய அவகாசத்தைப் பயன்படுத்துவாராகில், இவர் இம்மடத்தின் பரம்பரையில் அதிதர ஸாதாரணமான ப்ராபவ யுக்தராக விளங்குவாரென்பது திண்ணம்.

*   *   *   *   *

நமது ஸபையின் பதின்மூன்றாவது மஹாஸங்கம் நடக்கவேண்டிய ஸமயம் நெருங்கிவிட்டது. வெகு ஸௌகர்யங்களைக் கவனிக்கும்போது சென்னையிலேயே நிரந்தரமாக மஹாஸங்கத்தை நடத்துவதே நல்லதென்னலாம். ஆயினும் பலதேசங்களிலிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கோறிக்கைகளையும், நன்மையையும் உத்தேசித்து ப்ரதிவர்ஷமும் இடம் மாறுவதும் நன்றே. அடுத்த ஸஞ்சிகையில் இதைப்பற்றி நிர்வாஹ ஸபையாரின் நிஷ்கர்ஷத்தைக் கார்யதர்சி ஸ்வாமி வெளியிட ஸாத்யமாகும். என்று எதிர்பார்க்கப்படுகிறது. எப்படியாயினும் எல்லா ப்ரதேசங்களிலுமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் மஹாஸங்கத்தைச் சிறப்பாய் நடத்திவைக்க வேண்டிய பாரத்தைத் தம்மளவில் வஹிக்க வேண்டுமென்பதை இங்கு விஜ்ஞாபிக்கின்றோம்.

ஸ்ரீ:.

ஆழ்வார்பக்தி.[0]

'ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே' என்றபடியே ப்ரீதியோடு த்யாநம் செய்வதற்கு பக்தி என்று பெயர். த்யாநமாவது எண்ணெயினுடைய பெருக்குப் (தாரா) போல இடைவிடாம லிருக்கிற ஸ்ம்ருதியினுடைய வரிசை. 'தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்ததிரூபம்'. சரணாகதியை அங்கமாகக்கொண்டு பக்தியை அடையலாம். பக்திவழியினால் மோக்ஷம். ஆழ்வார்களுக்கு ஆரம்பம் முதலே இடைவிடாத பக்தி மேன்மேலும் ப்ரவஹித்து அதினால் அவர்கள் பகவானைச் சரணமடைந்து தம்முடைய தேக ஸம்பந்தத்தைத் துலைக்கவேணுமென்கிறார்கள். இது ஆர்த்தப்ரபத்தி. ஸர்வேச்வரனை த்யாநிப்பதில் பக்தி எல்லைமீறிப் போவதில் ஆழ்வார்கள் தாமான தன்மையையிழந்து ஸ்த்ரீ ஸ்வபாவத்தை (நாயிகாபாவத்தை) அடைந்து, புருஷர்களுடைய மனஸையும், கண்களையும் கவரக்கூடிய பெருமாளுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களில் ஈடுபட்டுத் தங்களை கோபஸ்த்ரீகளின் நிலைமையில் த்யாநிக்கிறார்கள். ஆகையால் கோபஸ்திரீகளுக்கு உண்டாகிற அவஸ்தைகளும், காமிநியான ஒருபெண் தன்னுடைய நாயகனின் பிறிவு ஆற்றாமையால் ஸங்கடப்படுகிறபடிகளும் இவர்களுக்கு உண்டு. மதாந்தரஸ்தர்கள் திருவாய்மொழியைத் தத்பரமான சாஸ்த்ரம் என்று வாசிக்கத்தொடங்கி, 'அஞ்சிறைய மடநாராய்!' என்று தூதுவிடுகிற ப்ரகரணத்தைக் கண்டவுடன் இதுகாமிகளுடைய கிரந்தம் என்று பொகட்டுப் போய்விட்டார்கள். அது பாக்யஹானியாலே என்று ஈட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. பாக்யஹாநியாவது, 'காமோ ஜந்யஃ' என்கிற ச்லோக ஜ்ஞாநம் இவர்களுக்கில்லாததினால் திருவாய்மொழியை முழுவதும் அநுஸந்தாநம் பண்ணி அந்த ஆநந்தத்தை அடையக்கூடாமல் போய்விட்டதுதான்.

தங்களுடைய நிஹீநமான ஸ்திதியையும், பெருமாளுடைய மேன்மையையும் பார்த்துத் தங்களுடைய எச்சில் வாயாலும் அபரிசுத்தமான கரண

0 இஃது இராமநாதபுரம் வித்வான் ஸ்ரீ. உ. வே. ராகவையங்கார் ஸ்வாமியால் திருக்குடந்தை ஆராவமுதன் ஸந்நிதியில் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் சுருக்கம், ஸ்ரீ. வே. ராமஸ்வாமி ஐயங்காரால் ஸங்க்ரஹிக்கப்பட்டது.

களேபரங்களாலும் மனஸாலும் நினைத்து, சுபாச்ரயமுமாய் அநந்த கல்யாண பரிபூர்ணமுமாய் நித்யமுமாய் இருக்கிற அந்த பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹ ஸ்வரூபத்துக்கு ஒரு அசுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்றுபயந்து, அவரை விட்டாலும் தாம் தரிக்கமாட்டாமையால், தாம் அந்த ஸர்வேச்வரனைக் கலந்து அவருக்கு ஒருகுறைவு உண்டுபண்ணுவதைக் காட்டிலும் தாம் முடிந்து போவதே நலம் என்று 'வளவேழுலகு' என்கிற திருவாய்மொழியில் ப்ரார்த்தித்தார்.

சுந்தரகாண்டத்தில் ஸீதாதேவி ஹநுமாரைக்கண்டு 'கச்சித் ஸ குசலீ ராம:' ராமன் க்ஷேமமா, நான் இல்லாமல்போனாலும் எங்கேயாவது ஸௌகர்யமா யிருக்கிறாரா என்று கொஞ்சம் உள்ளடங்கின கோபத்துடன் கேட்க, ஹநுமாருக்கு ஒரு ஸம்சயம் உண்டாயிற்று. என்னைவிட்டுப்பிரிந்து ராமன் ஸுகமாயிருக்கிறாரே, அவருடைய மனஸ்ஸானது என்ன கல்லா! என்று நினைக்கிறாளே இவள்; அந்த லோகநாதனை பெருமாளைவிட்டுப் பிரிந்த இவள் எப்படி ஜீவித்திருககிறாள் என்பதாக. இதை அறிந்துகொண்டு ஸீதாதேவி சொல்லுகிறாள். 'யாவச்ச ப்ரவ்ருத்திம், ஸ்ருணுயாம் ப்ரியஸ்ய ராகவஸ்ய தாவத் தஹம் தூத ஜிஜீவிஷேயம்' அதாவது எனக்கு மாத்திரம் அவ்விடத்தில் விசேஷப்ரீதியிருந்து, அவர் என்னை கவனிக்காமலிருந்தால் அது ஒருதலைக் காமமாகும். அவரும் என்விஷயத்திலேதாவது ப்ரவ்ருத்திக்கிறாரா என்று தெரிந்துகொண்டு நான் ப்ராணனை விடலாமென்றிருக்கிறேன், என்று, துஷ்யந்தன் சாகுந்தலத்தில் 'பரிக்ரஹ ப்ரார்த்தநா க்ருதார்தம்' என்று சகுந்தலைக்கும் தனக்கும் விவாஹமாகிறது அஸம்பாவிதமா யிருக்குமானாலும், அவளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியிருக்குமானால் அதுவே தனக்குப் பரமபுருஷார்த்தம் என்றதுபோல, ஸீதாதேவியும், ராமனுக்குத் தன்னிடத்தில் விச்வாஸம் பூர்ணமாக இருக்கிறதா என்று தெரிந்துகொள்கிறதற்காக ஜீவனை வைத்துக்கொண்டிருக்கிறாள். அவருக்குத் தன்னிடத்தில் அநுராகம் இல்லை என்ற ஸமாசாரம் தெரிந்தவுடனே தான் ப்ராணத்யாகம் செய்துவிடுவாள். 'ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யாவிவோத்த்ருதௌ।' ஜலத்திலிருந்து எடுக்கப்பட்ட மத்ஸ்யமானது ஈரப்பசையுள்ளவரையில் ஒரு க்ஷணகாலம் தான் ஜீவிக்கும். அதுமாதிரி ராமருக்குத் தன்னிடத்தில் ப்ரீதியிருக்கிறது என்கிற தசை அறிகிறவரையில் தான் நான் உயிரோடிருப்பது, என்றார்.

தவிர, தான் ஜீவிப்பதற்குக் காரணம் ஏதென்றால் ஒருக்கால் ராமன் வெகு ச்ரமப்பட்டு தன்னைக் காணவேணுமென்று ஸமுத்ரத்தையும் தாண்டி அவ்விடத்தில் வந்து பார்க்கையில், ஸீதை போய் விட்டாள் என்கிற ஸமாசாரத்தைக்கேட்க அவருக்குக் கஷ்டமுண்டாகுமே, அந்தக்கஷ்டத்தை அவருக்குத் தான் கொடுக்கக்கூடாது, எந்த விதத்திலும் அவருடைய ஸந்தோஷம் தான் தனக்கு பரமப்ரயோஜனம் ஆகையால் அவர் வருகிறதற்காக நான் ஜீவித்திருக்கிறேன் - என்று அர்த்தம் சொல்லலாம்

இதே ப்ரகாரம் ஆழ்வாரும் ஸர்வேச்வரனுக்கு அவத்யத்தை உண்டு பண்ணுவதைவிடத் தான் முடிந்துபோவதே நலம் என்று நினைத்தார்.

ஆண்டாளும், கிருஷ்ணன் விஷயமாய்த் தான் எவ்வளவு வ்யாமோஹப் பட்டும், அவன் வாராமையாலே ஒருகால் அவன் தன்னிடத்தில் ப்ரேமை இருக்கிறதோ என்று சாதித்து, ஒருகால் அவன் தனக்கு எதிர்ப்பட்டு அவன் தன்னை விஷயீகரிக்காமல்போனால்,

உள்ளே யுருகி நைவேனை உளளோ இலளோ வென்னாத
கொள்ளை கொள்ளி குறும்பனை கோவர்த்தனனை கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதன்னை கிழங்கோடும்
அள்ளிப்பறித்திட் டவன் மார்பிலெறிந்து என் அழலை தீர்வேனே.

எனக்கு அவனுடைய ஸம்ச்லேஷம் கிடைக்காமல் போனாலும், அவனுக்காகவென்றிருக்கிற இந்த ஸ்தநங்களுக்காகவாவது அவனுடைய ஸம்ச்லேஷம் கிடைக்கட்டும், நான் ப்ராணனை விடுகிறேன் என்றாள்.

ஆழ்வார் தன்னுடைய தன்மையிழந்து, ஸ்த்ரீ ஸ்வபாவத்தை அவலம்பித்து, நாயகியானவள் தன்னுடைய நாயகனுக்கு தூதுவிடுகிற ந்யாயமாய் பக்ஷிகளை வேண்டுகிறார்.

விதியினால் பேடை மணக்கும் மென்னடைய வன்னங்காள்
மதியினால் குறள் மாணாய் உலகிரந்த கள்வர்க்கு
மதியிலேன் வல்வினையே மாளாதோ? என்று ஒருத்தி
மதியெல்லா முள்கலங்கி மயங்குமா லென்னீரே.

ஸ்வாபதேசத்தில், வெளுப்பாயும் ஸாரக்ராஹியுமான அன்னத்தைத் தனக்கு தூதனாக வேண்டுவதால், ஸத்வகுண ப்ரசுரராயும், ஸாராஸார விவேசனம் பண்ணத்தகுந்த ஆசார்யனைக்கொண்டு சேதனன் தன்னுடைய நிலைமையை ஸர்வேச்வரனுக்குத் தெரியப்படுத்தி, ஆசார்யாள் மூலமாய் பகவத் ப்ரஸாதமும் பெறுகிறபடியை சொல்லுகிறது. ‘[illegible] ஸஹிதா [illegible]’ என்னும் ச்லோகத்தால் அஞ்சிறையமடநாராய், என்கிற திருவாய்மொழியின் அர்த்தத்தை ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். இந்தப்பாட்டுக்கு ‘ஸஹிதா [illegible]’ என்கிறதை எடுத்துக்கொள்ளவேண்டியது.

விதியினால், அத்ருஷ்ட வசத்தினால், என்னைப்போ லல்லாமல், உனக்கு உன்னுடைய பேடையோடு ஸங்கமம் கிடைத்திருக்கிறது. மநுஷ்யஜன்மாவை அடைந்து ப்ராம்மணனாய்ப் பிறந்தால் எப்படி ப்ராம்ம விவாஹம் சாஸ்த்ரீயமோ அப்படி திர்யக்கான உனக்கு நினைத்தபோதே சேர்வதுதான் சாஸ்த்ரம். விதியினால் பேடைமணக்கும்.

பெருமாளுக்குத் தன் அபேக்ஷிதம்பெற முதலில் ஸுக்ரீவனை அவன் பார்யையோடு சேர்த்துவைத்துப் பிறகு தன் பார்யாந்வேஷணம் பண்ண வேண்டியிருந்தது. நீ உன் ப்ரியையோடு இருக்கிறாய். எனக்கு அந்த ச்ரமம் கிடையாது.

மென்னடைய வன்னங்காள், மந்தமான நடையழகோடு கூடினவன்னங்களே!

எனக்கு ஒருவிதமான ஸாமர்த்யமில்லையாகிலும், கடகர்களான உங்களுடைய மேன்மையைப்பார்த்து உங்கள் புருஷகாரத்தை முன்னிட்டு என்னை ஸர்வேச்வரன் அங்கீகரிப்பான். இளையபெருமாள் கோபாவேசத்தோடு மஹாராஜர் அரண்மனையில் செல்லும்போது, அவருடைய சீற்றத்தைச்சமிப்பிக்க சுக்ரீவன் தாரையை முந்தி அனுப்பினான்.

‘[illegible]...... [illegible] ॥’

அவளுடைய ஹம்ஸம்போன்ற மென்னடையையும், பேடைமணக்கும் என்பது போன்ற (ஸலக்ஷணா) ச்ருங்காரரஸத்தின் விசேஷங்களை அனுபவித்த லக்ஷணங்களையும் ‘[illegible]’ யுங்கொண்டு இளைய பெருமான் முகங்கொடுத்ததைப்போல எனக்கும் ஸர்வேச்வரன் கிருபை பண்ணுவார்.

‘[illegible] ।’ பெருமாளுடன் பால்யம் துடக்கிக் காட்டுக்குப்புறப்பட்டவளாதலால் உமக்குக் காமதந்த்ரங்களில் விசேஷமான பரிசயம் கிடையாது. கோப

18672

தந்திரத்தில் மாத்திரம் அதிக பரிசயம் உண்டுபோலிருக்கிறது. பெருமாளுடைய உத்தேசமாகிற பார்யாஸங்கமத்தை மஹாராஜர் செய்ததற்காக கோபித்துக்கொள்ளலாமா என்று பலவிதமான சாடு உக்திகளைச்சொல்லிக்கோபத்தை அடக்கி ப்ரஸந்நமாக்கினாப்போல் நீங்களும் ஸர்வேச்வரனை எனக்கு உங்களுடைய உக்திகளாலே அநுகூலமாக்கவேணும்.

மதியினால் குறள்மாணாய்:— தன்னுடைய புத்தி சாதுர்யத்தினால் வாமநரூபத்தோடு கூடின ப்ரம்மசாரியான. ப்ரஹ்லாத ஸம்பந்தம் பெற்ற பலியையும் அழிக்காமல் இந்த்ரன் யாசனையையும் பூர்த்திசெய்ய இந்த உபாயம் தான் ஸரியென்று அவலம்பித்தவன். வேறுப்ரகாரங்களில் யாராவது ஒருவருக்கு கெடுதல் உண்டாகும். அப்படிசெய்யாமல் இருவர்க்கும் க்ஷேமத்தை யுண்டாக்கினார்.

உலகிரந்த கள்வர்க்கு:— பூமியை யாசித்த கள்வருக்கு. உன்னிடத்தில் பருத்திபட்ட பன்னிரண்டு பாட்டையும் பட்ட இந்த லோகத்தை (ப்ரபஞ்சத்தை) நீ யாசிக்கவேண்டியதாய் வந்ததே! என்கிறார். உனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் விதேயமானவஸ்து யாசித்தல்லது ஸ்தாபித்துக்கொள்ள முடியாமல் போவதே [வஞ்சகமாய்க் கைப்பற்றியபடியினால் கள்வன் என்றார்].

மதியிலேன் வல்வினையே மாளாதோ - ஞாநமில்லாத எனக்கு ப்ரபலமான பகவதநுபவ விரோதியான பாபங்கள் தொலையாதோ

மதிகலங்கி, மதியெல்லாங்கலங்கி, மதியெல்லாம் உள்கலங்கி, ஸாமாந்ய ஞானமும், விசேஷ ஞானமும், ஸ்வரூபமும் எல்லாம் தொலைந்து போம்படி மயங்கி கிடக்கிறாள் ஒருத்தி என்னீரே - என்று சொல்லுங்கோள். என்னீரே - 'வா வாய ... ' நீங்கள் ஒருவார்த்தை சொல்லில் நான் ஸத்தைபெறலாம், அல்லது நான் முடிந்துபோவேன்.

ஒருத்தி யென்றால் அவருக்குத்தெரியும். காட்டில் ஒரு ராஜகுமாரன் ஒரு பெண்மானை அடித்து அது துடித்து கொண்டிருந்தால், பிறகு அவனிடத்தில் ஒருமான் அடிபட்டு துடிக்கிறது என்று சொன்னால் எப்படி அவனுக்கு தெரியுமோ, அப்படி அவனால் துன்பத்தை யடைகிற என்னை ஒருத்தி யென்றால் அவனுக்கு எல்லாம் தெரியும்.

மயங்குமால்.—சரமதசைக்கு முன்தசையிலிருக்கிறாள் என்றுசொல்லுங்கள். இப்போ போனால் மயங்கி கிடக்கிறவளை பார்க்கலாம். தாமஸித்தால் முடிந்துபோனவளை தான் பார்க்கலாம். ஸ்வாபதேசத்தில் ஆசார்யர்கள் சேத

நனை விஷயீகரித்து உஜ்ஜீவிப்பதுபடி பகவானை ப்ரார்த்தித்தல் சொல்லப்பட்டது.

நம்முடைய ஸம்ப்ரதாயத்திலிருக்கிற தத்வவிசாரத்தின் முடிவுக்குத்தான் எவ்வளவுதூரம் ஆராய்ச்சிசெய்தாலும் பாச்சாத்யர்கள் வந்து சேருகிறார்கள். சேதநம் அசேதநம் என்கிற பிரிவு எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். அதில் நம்முடைய அஸ்வாதந்த்ர்யத்தையும் அல்பசக்தியையும் கொண்டு யோஜித்துப் பார்த்தால், ஸர்வசக்தனையும் ஸ்வதந்திரனையும் ஒருவனிருந்தே தீரவேண்டும் என்று ஏற்படும். அசேதநத்தோடு பிரித்துப் பார்த்தால் எப்படி சேதநங்களை ஞானமுள்ளது என்கிற லக்ஷணத்தால் பிறித்துச்சொல்லவேண்டி வருகிறதோ அப்படிச் சேதநர்களுக்குள் ஜீவேச்வரர்களைப் பிறிக்க வேண்டியதானால். அஸ்வாதந்த்ர்யம் சேஷத்வம் என்கிறதைச் சொல்லித்தான் பிறிக்கவேணும், ஞாநம் இரண்டுக்கும் ஸ்வரூப மாகையால் அது பூர்ண லக்ஷணமாகமாட்டாது. ஆகையால் சேஷத்வம், ஜ்ஞாத்ருத்வம் இரண்டும் ஜீவனுக்கு லக்ஷணங்களாகவேண்டியது. இதினால்தான் தன்னைப்பற்றி சத்ருவாகிய ராவணனிடத்தில் விசேஷித்துக் கௌரவமாய் சொல்லிக்கொள்ள வேண்டிய இடத்திலும்கூட ஹநுமான் 'தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய!' என்றார்

நம் ஸம்ப்ரதாயத்தில் திருவாய்மொழியாகிற 4000 - பாசுரங்களும் 4000-ரத்நங்கள். அதினுடைய ரஸத்தை அநுபவிக்கிறவர்களுக்கு இதரபதார்த்தங்கள் க்ஷுத்ரமாய்த் தோன்றும்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தமும் வைதிகமர்யாதை நிறைவும்.

(முன்தொடர்ச்சி.)

உபாய ஸ்வரூபத்தை யுள்ளபடி யறிகையாவது:—கர்ம ஜ்ஞாந பக்தி ப்ரபத்தி யென்று நான்கு வகைப்பட்ட உபாயங்களில் வைத்துக்கொண்டு, கர்மயோகமாவது ஸந்த்யாவந்தநம், பஞ்சமஹாயஜ்ஞம், அக்நிஹோத்ரம், யஜ்ஞம், தானம், புண்யக்ஷேத்ரவாஸம், தீர்த்தயாத்ரை, ஸமாராதநம், ஜபம், தர்பணம், தொடக்கமான கர்மாநுஷ்டாநத்தால் வந்த காயக்லேசத்தாலே பாபக்ஷயமுண்டாய் இந்திரிய த்வாரா ப்ரஸரிக்கிற ஜ்ஞாநத்துக்கு சப்தாதிகளை விஷயமாக்காமல் யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யாந தாரண ஸமாதி ரூபமான அஷ்டாங்க க்ரமத்தாலே யோகாப்யாஸ காலம் வரையில் ஆத்மாவை விஷயமாக்கிக்

கொண்டு போருகை யென்றும், ஜ்ஞாந யோகமாவது இப்படி யோகத்தினால் உண்டாகும் ஜ்ஞாநத்துக்கு ஹ்ருதயகமலம் முதலான இடங்களில் எழுந்தருளி யிருக்கும் ஸர்வேச்வரனை விஷயமாக்கி அவனை [illegible] மாய் [illegible] மாய் [illegible] மாய் அநுபவித்து யோகாப்யாஸ க்ரமத்தாலே அநுபவ காலத்தைப் பெருக்கி இடைவிடாத அநுபவ ரூபமாக்குகை யென்றும், பக்தி யோகமாவது இப்படிப்பிறந்த அநவரத பாவநை யென்னும் தைலதாரைபோன்ற இடைவிடாத ஸ்ம்ருதியின் தொடர்ச்சியானது பகவானிடத்தில் ப்ரீதிரூபமாகப் பரிணமித்து அவனுடைய க்ஷணகால விச்லேஷத்தையும் ஸஹியாமல் ‘இனிநான் போகவொட்டேன்’ என்று தடுத்தும் வளைத்தும் பேற்றோடே தலைக்கட்டிக் கொள்ளும்படியிருக்கு மிருப்பு என்றும், ப்ரபத்தி உபாயமாவது ‘[illegible] ।’ என்றும், ‘களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண்மற்றிலேன்’ என்றும் ‘நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலு மினியுன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்,’ என்றும் ‘ஆறெனக்கு நின்பாதமே சரண்,’ என்றும் சொல்லுகிறபடியே கீழ்ச்சொன்ன கர்மம் ஜ்ஞாநம் பக்தி யென்னும் ஸாதநாநுஷ்டாநமாகிற கைம்முதலில்லாமையையும் வேறு போக்கடியில்லாமையும் முன்னிட்டு ப்ரபலபாவங்களைப் பச்சையாகக் கொண்டு ‘அலர்மகளை’ முன்னிட்டு, வாத்ஸல்யம் முதலான ரக்ஷணோபயோகிகளான குணவிசிஷ்டனான அவன் திருவடிகளையே இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாகவும் ப்ராப்யமாகவும் அறிந்து பற்றுகை யென்றும், அறிகை.

விரோதி ஸ்வரூபத்தை யுள்ளபடி யறிகையாவது:—விரோதிதான், ஸ்வரூபவிரோதி, பரத்வவிரோதி, புருஷார்த்த விரோதி, உபாயவிரோதி, ப்ராப்தி விரோதி, என்று ஐந்துவகைப்படும், இதில் ஸ்வரூபவிரோதி யாவது தேஹமே ஆத்மா வென்றிருக்கையும், தன்னை ஸ்வதந்த்ரனென் றெண்ணுகையும் பகவானைத்தவிர வேறொருவர்க்குச் சேஷமென்னும் புத்தியும் என்றும்; பரத்வ விரோதியாவது, தேவதாந்தரங்க ளிடத்தில் பரத்வ ப்ரதிபத்தியும் அவர்களோடு ஸர்வேச்வரனை ஸமத்வ புத்திபண்ணுகையும் என்றும்; புருஷார்த்தவிரோதியாவது, ஸ்வரூப ப்ராப்தமான பகவதநுபவ கைங்கர்யங்களைத் தவிரவும் வேறு ஐஹிகாமுஷ்மிக பலபோகத்தைப்பெற ஆசை யென்றும், உபாய

விரோதியாவது, ஸித்தோபாயத்தைக் காட்டிலும் உபாயாந்தரங்கள் விலக்ஷணங்க ளென்றெண்ணுகையும் பேற்றின் கனத்துக்குத் தகுந்தபடி யிருக்கை யன்றிக்கே ப்ரபத்தி அல்பமானது என்றெண்ணுகையு மென்றும்; ப்ராப்தி விரோதியாவது ப்ராரப்த சரீரத்தின் ஸம்பந்தத்தாலே வரக்கடவதான பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரம் துடக்கமானவைகள் என்றும்; அறிகை.

இப்படிப்பிறந்த அர்த்தபஞ்சக ஜ்ஞாநாநுரூப அநுஷ்டாந முள்ளவர்களாகையாவது — கீழ்ச்சொன்ன அர்த்தங்களை யனுஸந்தித்து, ‘[illegible],’ என்றபடியே பரம புருஷார்த்தமான பகவதநுபவ ப்ராப்திக்கு நல்ல உபாயமாக அவன் திருவடிகளில் பண்ணும் ப்ரபத்தி யொழிய வேறு ஸாதநமில்லை யென்றறிந்து சரணவரணம் பண்ணி அதனால் உபாயாநுஷ்டாநத்தில் இனிச்செய்ய வேண்டுவ தில்லாமையாலே பாரங்கழிந்தவர்களாய், ‘[illegible] ॥’ பிறருடைமைகளில் விருப்பமும் மனதால் பிறருக்குகேடு நினைப்பதும் வீணான ஆக்ரஹமும் என்கிற மாநஸமான மூன்றுவித அக்ருத்யங்களென்ன; ‘[illegible] ॥’ கடூரபாஷணமும் பொய்யும் கோழ்ச்சொல்லுதலும் சாஸ்த்ர ஸம்பந்த மின்றிக்கே வீண்வம்பளத்தலுமாகிய வாசிகமான நாலுவகை அக்ருத்யங்களென்ன; ‘[illegible] ॥’ பிறர் சொத்தை அநுமதியின்றி க்ரஹித்தலும் விதியை யதிக்ரமித்துப் பண்ணும் ப்ராணிபீடையும், பிறர்ககர்யார்ஹமான ஸ்த்ரீ விஷயங்களை மோஹாதிகளாலே ஸ்வீகரிக்கையும், ஆகிற சாரீரமான மூவகை அக்ருத்யங்களென்ன; ‘[illegible] ॥’ யவனொருவன் ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணனை தேவதாந்தரங்களோடு ஸமானனாக எண்ணுகிறானோ அவன் சந்த்ராதித்யர்க ளுள்ளளவும் கோரமான நரகத்தை யடைகிறான் என்கிற ப்ரமாணத்தை யதிலங்கனம் பண்ணி ஈச்வரனை இதர தேவதைகளோடு ஒப்பிட்டு நினைக்கையும் ராமக்ருஷ்ணாத்யவதாரங்களை மநுஷ்ய ஸஜாதீயமாக நினைக்கையும், வர்ணாச்ரமங்களின் ஆசாரத்தை

மீறி சதுர்த்தவர்ணத்தினர் வேதமந்த்ரங்களை யுச்சரித்து பகவதாராதநம்பண்ணு தலும், ஸந்யாஸாச்ரமிகள் பகவதாராதநத்தில் தாம்பூலநிவேதநாதிகள்பண்ணுத லும் பகவந் த்ரவ்யாபஹாரமுமாகிய பகவதபசார மென்ன, அஹங்காரார்த்த காமமடியாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதமாகிற பாகவதபசார மென்ன, ஹிரண்யனைப்போலே பகவத்விஷயம் பாகவத விஷயம் என்ருல் நிஷ் காரணமாகக் காணக் கேழ்க்கப் பொருதபடி யிருக்கையாகிற அஸஹ்யாபசார மென்ன, இவைகளாகிற நிஷித்தங்களை யநுஷ்டிக்கை யாகிறவிபரீத ப்ரவ்ருத்தி யினின்றும் நிவ்ருத்தர்களாய், ‘வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் । விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யத் தத்தோஷகாரக: ॥’ தத்தம் வர்ணங்கட்கும் ஆச்ரமங்கட்குமுரிய தர்மாநுஷ்டாநமுள்ள புருஷ ஞல் பகவான் ஆராதிக்கப்படுகிருன் இதைவிட அவனை யுகப்பிக்கும்வழி வேறில்லை என்று பராசர பகவானும் ‘ஶ்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே । ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ: ॥’ வேதமும் ஸ்ம்ருதியும் என்னுடைய ஆஜ்ஞா ரூபங்கள்; யவ னெருவன் அவைகளின்படி நடந்துகொள்ளத் தவருகிருனே என்னுடைய ஆணையை மீறி அதனுல் எனக்குத்ரோஹம் செய்தவனுன அவன் என்னிடத்தில் பக்தி பண்ணினனே யாகிலும் வைஷ்ணவனுகமாட்டான், என்று ‘ஆகையால் வை திகாசாரங்களில் ஸாதநபுத்தியைத் தவிர்த்து அநுஷ்டிக்கக்கடவன் என்று பெரியபிராட்டியும் ஸர்வேச்வரனும் அருளிச்செய்த படியாலே உபாயத்வபுத்தி யைத் தவிர்த்து எல்லாவர்ணுச்ரம தர்மங்களையும் பகவானுடைய முகவிகாஸத் திற்கு ஹேதுவானதை கைங்கர்ய ரூபத்தாலே அநுஷ்டிக்கு மவர்களாய்ப் போருகை.

‘வேதவிஹிதமான வர்ணுச்ரமாநுஷ்டாநமும் பகவத் பாகவத கைங்கர்ய மும் மாநஸ வாசிக காதிகங்களாலே யதாபல மநுஷ்டித்து.......... ப்ராப் யத்தில் த்வரையும் ப்ராபகத்திலத்யவஸாயமும் விரோதியில் பயமும் தேஹத் தில் அருசியும் ஆர்த்தியும் ஸ்வரூபத்தி லுணர்த்தியும் ஸ்வரக்ஷணத்தி லசக்தி யும் உத்தேச்யவிஷயத்தில் கௌரவமும் உபகாரவிஷயத்தில் க்ருதஜ்ஞதையும் உத்தாரக ப்ரதிபத்தியும் அநுவர்த்திக்கையும், வேணும்’ என்று இவர்களு டைய நிஷ்டையை ஸ்ரீலோகாசார்யரும் பரக்கவருளிச்செய்தார்.

இப்படி ஜ்ஞாநாநுஷ்டாநங்களோடே கூடிவர்த்திக்கு மவர்களை ஈச்வரன் ‘ஸ்வயிகிம்ஹி ஸ்தாவேஶே கிங்கார்யம் வீதயாசீ ।’ என்று உமக்கோரவர்த்யம் வரில் பிராட்டியாலும் ஒரு குறையுடையவ னல்லேன் காண் என்று இன்ரு ச்ரயித்த மஹாராஜர் பக்கல் வ்யாமோஹத்தாலே அருளிச்செய்தபடியே பிராட் டிமாரிலும் நித்ய முக்தர்களிலும் அத்யந்தாபிமதர்களாகக் கொண்டு ‘க்ஷணேऽபி தே யத்விரஹோऽதிது:ஸஹ:’ என்கிறபடியே இவர்களுடைய பிரி வை க்ஷணமும் ஸஹியாதவனுய் சரீராவஸாநத்தில் ‘ஏஷ ஹ்யேவாநந்தயா தி’ என்கிறபடியே ஆநந்த மயமான ஸ்வாநுபவத்தை நித்யமாகக் கொடுத் தருளுகையால் ததநுபவ ஸௌக்யமாகிற அம்ருதஸாகரத்தி லமுழ்ந்தின வர்களாய் காலதத்வமுள்ளதனையு மிருப்பார்கள்.

‘ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா’ அப்படி முக்தனுனவன் ஸர்வேச்வரனுடன்கூட இருந்து ஸகலவித போகங்களையு மனுபவிக்கிருன் என்றும் ‘ஸாயுஜ்யம் ஸர்வாத்மநா தைதிரீயந்த்ரிதோ,’ ஸோ கௌஶ்யத்தை யடைந்து க்ருதக்ருத்யனுன அவன் ஸர்வேச்வரனுடன் இணைபிரியாதிருந்து ஆநந்திக்கிருன் என்றும்.

‘முகில்வண்ண வானத்திமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே,’ என்றும் சொல்லாநின்றதிறெ!

ஆக கீழ்ச்சொன்ன இவ்வளவாலும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸித்தாந்த மானது உபாயாநுஷ்டாந தசையோடு பலாநுபவ தசையோடு வாசியற எல்லா அவஸ்தைகளிலும் வைதிக மர்யாதையைவிட் டகலாதிருக்கு மென்றதாயிற்று.

ஶ்ருதாயாம் ஸம்ஸ்தநாவேவ ஸம்ஸீக்ருத விசாரிதம் ।
ஸித்தாந்தஜ்ஞா வதாந்யாய வைநேயேஷ்வாயதேப யாந் ॥

வேளுக்குடி. சேஷாத்ரி யாசார்யர்.

ஸ்ரீ:

திருமங்கையாழ்வாரும் ஆராவமுதனும். *

‘ஆத்மாவை வெய்யிலிலே வைத்து, சரீரத்தை நிழலிலே வைத்தார்’ என்று இவ்வாழ்வார் விஷயப்ராவண்யத்துடனிருந்த ஸ்திதியைச் சொல்லு கிறது. ‘வாஸுதேவ தருச்சாயா நாதிஶீதா ந கர்மதா । நரகாங்கார ஶமநீ ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே ॥’ என்றபடியே ஸர்வ வ்யாபியான வாஸுதேவச் சாயையில் ஆத்மாவை வைக்கவேண்டியிருக்க இவர் விஷய ப்ரா

* இஃது வித்வான் ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி திருக் குடந்தை ஆருவமுதன் ஸந்நிதியில் 4—7—23ல் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம். ஸ்ரீ. உ. வே. T. ராமஸ்வாமி அய்யங்காரால் ஸங்க்ரஹிக்கப்பட்டது.

வண்யத்தையும் இவருக்கு அந்த விஷயத்திலிருந்த ராஸிக்யத்தையும் பார்த்து இவரைத் தன்வடிவழகாலே தனக்கு வசீகரணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று ஸர்வேச்வரன் தானே திருமந்த்ரத்தை உபதேசித்தான். அந்தத் திருமந்திரத்தில் நாராயண சப்தத்தில் தோன்றுகிற ஸௌலப்யத்திற்கு எல்லை நிலமான அர்ச்சாவதாரத்தில் அதிலும் ஆராவமுதாழ்வாரிடத்தில் இவர் மிகவும்ப்ரவணராயிருந்தார். 'வாடினேன்வாடி' என்றது நிழ் தன் ஆத்மாவானது வாஸுதேவச்சாயையை ஆச்ரயிக்காததினால் ஸங்கடத்தை அனுபவித்து வெயிலில் தபித்து கொண்டிருந்தது என்பதை வெளியாக்கும். இதர நிழல்களுக்கும் இந்த வாஸுதேவனுகிற மரத்தின் நிழலுக்கும் வாசி அநேகம் இருந்தாலும் வாஸுதேவனுடைய நிழலில் நாம் ஒதுங்கியிருக்கிறோம் என்கிற ஞானத்தையுடையவர்களுடைய தாபத்தை மாத்திரம் போக்கும். அந்த ஞானமில்லாதவர்களுக்குக் கார்யகரமாகாது. இவ்வாழ்வார் விஷய ப்ரவணராயிருந்த நிலைமையில் இவருக்கு இருந்த ராஸிக்யத்தை ஸர்வோத்க்ருஷ்டமான தன்வடிவழகை காட்டி ஸர்வேச்வரன்இவரை அத்தாலேவசீகரணம்செய்தருளினான் அர்ச்சாவதாரத்தில் பெருமாளுக்கு திருவாபரணம் சாத்துவதெல்லாம் வசீகரணோபாயம். ருசிபிறந்தால் உபாயம்; உபாயமானால் போக்யமுமாய் ப்ராப்யமுமாய் இருக்கும். 'ஸாதொஷீ ஸஂஹஃ வாஸஶாவஷி' என்று சொல்கிறமாதிரி காமுகர்களுக்குங்கூட அபிமதங்களான விஷய வ்யாபாரத்துக்கு ஆநுகூல்யம் திவ்ய க்ஷேத்ரங்களில் கிடைக்கும் என்று அங்கேபோனால் அங்கே யாத்ருச்சிக ஸுக்ருதமாய்ப் பெருமாளை ஸேவிக்கும்படி நேரிடுகிறது. இந்த ப்ரகாரமாயாவது தான் திவ்யக்ஷேத்திரங்களில் வாசஞ்செய்து ஸம்ஸாரி சேதநர்கள் உஜ்ஜீவிப்பதற்காக அர்ச்சாவதாரத்தில் பகவான் எழுந்தருளி யிருக்கிறது.

இவர் வெய்யிலிலிருந்து நிழலில் பிறகு வந்தவர்களாய் நிழலின் அருமையை மற்ற ஆழ்வார்களை காட்டிலும் அதிகமாய் அனுபவித்தார். 'ரூஶ்யாய ஷிஷாநா:' என்று ஸுமந்திரர் அககாட்டில் நின்றுகொண்டு ஒருக்கால் ராமன் திரும்பி வரமாட்டாரா என்று பார்த்து கொண்டிருந்ததுபோல, ஸர்வேச்வரனும் இந்த திவ்யதேசத்தில் யாராவது ஒரு பக்தன் தன்னை ஆச்ரயிக்க வரமாட்டாரா என்கிற ஆசையினால் காத்து சயனித்துக்கொண்டு 'ஶெஷெ வாஸுஷாஸ்தாஶாயா:' என்று பரதாழ்வான்போலே நாம் விட்டாலும் தான் விடேன் என்று காத்துக்கொண்டிருக்கிறார்,

'குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி என்கிற' பாசுரத்தில் 'உடலெனக் குருகுமாலோ' என்னுடைய சரீரம் சிதலமாகிறதே என்று உலகத்தாரைக் கேட்டார். ஸர்வேச்வரனைக் கேட்டால் அவன் அபே

க்ஷிதம் தலைகட்டிற்றென்று பேசாமலிருந்து விடுவன். மற்றை யாழ்வார்களைக் கேட்டால் அவர்களும் இவரைபோலே யிருப்பதால் ஓட்டை யோடத்தோடு ஒழுக வோடத்தில் நிலைமையாகும். ஆகையால் அவர்களைவிட்டு 'உலகத்தீரே' என்று ஸம்ஸாரி சேதனர்களைப் பார்த்து 'நீங்கள் பெரியபெருமாளை ஸேவித்துமீண்டும்' குறிப்பழியாதே ஒருவிதவாட்டமு மின்றியே செல்கிறீர்களே; உங்களுடைய உடம்பு உருகாமல் அப்படியே இருக்க என்ன உபாயம்' என்று கேட்கிறார். 'கோயிலுக்குவந்து, ஆரோக்யத்திற்காகவும், ஆயுஸ்ஸுக்காகவும். தங்கள் தங்களபேக்ஷிதங்களுக்காகவும் ஸர்வேச்வரனை அர்ச்சனை செய்து ஆச்ரயிக்கிறீர்களே. அவனுடைய ஸௌலப்யத்திலும், ஸௌந்தர்யத்திலும், ஈடுபட்டு இந்தக்குண பூர்த்திக்குத்தோற்று என்னிடத்தில் ஓடுகை மாறுகாணேன் என்று ஏங்கிக்கிடக்க வல்லவர்களோ நீங்கள்' என்கிறார். அவனுடைய கிடையழகை பாருங்கள். ஸாமான்ய மனுஷ்யர்கள் படுத்தால் அவர்களுக்குள்ள வைரூப்யமெல்லாம் சயனத்திலே தோன்றும்.

இங்கே அவன் கிடக்கிற காம்பீர்யத்தை பாருங்கள். 'கௌஸல்யா ஸுப்ரஜா' என்று சக்ரவர்த்தி திருமகனை எழுப்பவந்த விச்வாமித்ரன், கிடையழகைக்கண்டு மங்களாசாஸநம் பண்ணினான். அங்கே இன்னொரு விசேஷம். 'கௌஸல்யா ஸுப்ரஜா' என்றதினால் ஒவ்வொருவர் ஓரோர்கார்யத்திற்காக பிள்ளைபெறுவர்கள். 'கௌஸல்யா லோகபர்த்தாரம்' என்று ஸகலலோகங்களும் உஜ்ஜீவிக்கும்படி செய்கிற ஒருமகாபுருஷனை பெற்றாள் ஸுமித்ரையானவள் தன்னுடைய பிள்ளைக்கு ராமகைங்கர்யமே உத்தேச்யம் என்றதை உபதேசித்து மரவுரியைத் தனக்கு ஆபரணமாக நினைக்கும்படி இளையபெருமாளைப் பண்ணினாள் 'ஸுப்ரஜாஸ்த்வயா ஸௌமித்ர:' என்றார் ரிஷி அதினால்தான் லக்ஷ்மணரைப்பற்றிச் சொல்லுமிடங்களிலெல்லாம் ஸௌமித்ரியென்றே வ்யபதேசம்.

சித்ரகூட பர்வதத்தில் ஸீதாதேவியும் சக்ரவர்த்தித் திருமகனும் மாறிமாறி ஒருவர் மடியில் ஒருவர் தூங்கும்பொழுது, ஸீதாதேவியைக் காகாஸுரன் ஹிம்ஸிக்க 'ஸயோ ஶொயிதஃ ஸ்ரீமாந் ஸுவஸுப்த: ஸிம்ஹ இவ' ஸிம்மமானது தூங்கும்போதும் எப்படியானால் க்ஷுத்ர ஜந்துக்களுக்கு பயத்தை யுண்டாக்குமோ, அப்படி ஸ்ரீராமபத்ரன் படுத்திருந்தாலும் சத்ருக்களை நாசம்செய்யக்கூடிய சாமர்த்ய முள்ளவன். அவனுடைய கிடையழகைகண்டு எல்லாரும் ஆச்சரியப்படக் கூடியவர்கள். ஆகையாலேயே (ஸ்ரீமாந் ஸுவஸுப்த:) தூங்குகிற காலத்தில் சோபையோடு விளங்குகிர்' என்று காட்டுகிறது. 'ஸயோ ஶொயித:' அப்பேர்ப்பட்ட ராமனை நான் காகாஸுரனுக்காக எழுப்பிவிட்டேன். தண்டகாரண்ய வாஸிகளான ருஷிகள்

ருமனுடைய வரவை ஸதா எதிர் பார்த்து கொண்டிருந்தும், பெருமாள் தண்டகாரண்யத்துக்கு எழுந்தருளினவுடன் தாங்கள் செய்தது தப்பு என்று நினைத்தார்கள். அவ்வளவு ஸௌகுமார்யங்களோடு கூடினவனை அநுசிதமாக காய்கிழங்குகளை ஸாப்பிடுகிறதாம் இருக்கிற இடத்திற்கு அழைத்தோமே என்று தங்கள் கார்யத்தை மறந்து அவனுக்கு மங்களாசாஸநம் பண்ணினார்கள் ([illegible]' என்று, கிளைகள்தோறும் தாவும்படியான எனக்குக்கூட உம்முடைய அவயவ ஸௌந்தர்யத்தில் கலக்கமுண்டாகிறதே. நீண்டதாயும் அழகாயும் இருக்கிற இந்த கைகளை எங்கள் கண்ணெச்சில் படாதபடி ஸர்வாபரணங்களினாலும் அலங்கரிக்கிற வ்யாஜமாய் மறைக்கக் கூடாதா?

இந்த திருமங்கையாழ்வான் லோகாந்தரத்தில் அனுபவிக்கவேண்டியதான மோக்ஷத்தில் தனக்கு விச்வாஸமில்லை யென்றும், அப்படி ஒரு தேசவிசேஷமிருப்பதும் அஸம்பாவித மென்றும் சொல்கிறார். தேஜோமயமாயும் ஏழு குதிரை கட்டினதும் ஒரு சக்கரமு முள்ளதுமான ஸூர்ய மண்டலத்தை பேதித்துக்கொண்டு போகிறான் என்பதை அஸம்பாவிதம் என்கிறார். இந்த சரீரத்தை பரித்யாகம் பண்ணி வேறு சரீரத்தினால் அனுபவிக்கக்கூடிய மோக்ஷாநுபவம் தனக்கு வேண்டா மென்றும் '[illegible]' என்று ஸீதாபிராட்டியானவள், ராமனுடைய விரகதாபத்தினால் க்லேசத்தை யடைந்து மெலிந்துபோன சரீரத்தை ராமன் அங்கீகரிக்கவேணுமென்று நினைத்தாப்போல, வாடினதான தன்னுடைய ப்ராக்ருத சரீரத்தோடேயே பூர்ணமாய் அநுபவித்து ஸகல புருஷார்த்தங்களையும் அடையும்படியான அர்ச்சாவதார ஸேவையே தனக்கு பரம உத்தேச்யம் என்கிறார்.

இவர் ஒவ்வொரு திவ்யதேசங்களுக்கு 10 பாசுரம் என்று பாடியிருக்க செய்தேயும், திருகுடந்தை எம்பெருமானுக்கு ப்ரத்யேகமாய் இவ்வளவு பாசுரம் என்று நிறுத்திவிடவில்லை. அப்படிசெய்தால் ஆராவமுதனுடைய ப்ரஸ்தாபத்தை பிறகு நிறுத்திவிட வேண்டும் என்கிற ஸந்தேகத்தினாலும் தனக்கு தோன்றின விடத்திலெல்லாம் அமுதனை சொல்லாமல் தரிக்கமாட்டாமையாலும் உபக்ரமத்திலும், உபஸம்ஹாரத்திலும். நடுவில் அடிக்கடியும் ஆராவமுதனை பற்றியே பாடியிருப்பதாலும் இவர் அந்த எம்பெருமானிடத்தில் விசேஷித்த ஈடுபாடுடையவர் என்று தெரிகிறது.

ஸ்ரீ:

இரண்டாந்திருவந்தாதி.

இந்தப்பாசுரத்தில், தேவாதிதேவனை பரமபதநிலயன் முதலில் ஜகத்ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கடலிலேவந்து தங்கிப் பின்பு விரோதிநிரஸநார்த்தமாக ஸ்ரீக்ருஷ்ணனாயவதரித்துப் பின்பு 'நாம் வருவதும் போவதுமாக இராமல் ஸ்திரமாக இருந்து ஸம்ஸாரிகளைக் காக்கவேணும்' என்று ஸ்ரீரங்கம் திருமலை முதலியவற்றிலே நின்று தன்னுடைய க்ருஷி என்னளவிற் பலித்ததனால் மிக்க அபிநிவேசமுள்ள என்மனத்தை நித்யவாஸமாகக் கொண்டானென்கின்றனர். (உ-அ)

29. மகனாகக் கொண்டெடுத்தாள் மாண்பாய கொங்கை
யகனார வுண்பனென் றுண்டு - மகனைத்தாய்
தேறாத வண்ணந் திருத்தினாய் தென்னிலங்கை
நீறாக வெய்தழித்தாய் நீ.

(இ-ள்.) தென் இலங்கை அழகிய இலங்காபுரி, நீறு ஆக - சாம்பராய்ப் போம்படி, எய்து - திருவில்லாலே திருச்சாரங்கனைச் செலுத்தி, அழித்தாய் - முடித்துப் போகட்டவனே! நீ—!—மகன் ஆக கொண்டு எடுத்தாள் -(தன்) புத்திரனாகக்கொண்டு முலைகொடுக்கும்படி(அன்புடையாள்போல)எடுத்த பூதனையினுடைய, மாண்பு ஆய கொங்கை-(பால்நிரம்பியிருத்தலாலே) அழகான ஸ்தநத்தை, 'அகன் ஆர உண்பன் -வயிறுநிறையும்படி உண்ணக்கடவேன்' என்று —, உண்டு - (பாலோடு அவளது உயிரையும்) குடித்து, மகனை - புத்திரனான உன்னை, தாய் -(உனது) தாயான யசோதைப்பிராட்டி, தேறாத வண்ணம் - (விச்வஸித்திராமல்) துணுக்குத் துணுக்கென்று அஞ்சும்படி, திருத்தினாய் - சிட்சித்துவிட்டாய்; (எ - று.)

இதில், 'மாவாய் பிளந்த மகன்' என்று க்ருஷ்ணாவதாரம் ப்ரஸக்தமானதனால், அதிலே ஈடுபட்டு ஆழ்வார் அருளிச்செய்கின்றன ரென்க. தாயாய்வந்து பூதனை ஸ்தநங்கொடுத்து இறந்ததுகண்டு 'இன்னும் நமதுபிள்ளைக்கு யாவர் என்னதீங்குசெய்வார்களோ?' என்று யசோதைப்பிராட்டி எப்போதும் துணுக்குத் துணுக்கென்னும்படியாயிற்றென்று அவ்யசோதையின் பரியுந்தன்மையை மூன்றாமடியில் விளக்கினர். தென்னிலங்கை-தெற்குத் திசையிலுள்ள இலங்கையுமாம். (உகூ)

30. நீயன் றுலகளந்தாய் நீண்ட திருமாலே
நீயன் றுலகிடந்தா யென்பரால் - நீயன்று
காரோத முன்கடைந்து பின்னடைத்தாய் மாகடலைப்
பேரோத மேனிப் பிரான்.

(இ-ள்.) பேர் ஓதம் மேனி பிரான் - பெரியகடல்போலேயிருண்டு குளிர்ந்த திருமேனியையுடையனாகி அவ்வடிவழகை முற்றூட்டாக என்னை யநுபவிப்பித்த உபகாரகனே! நீண்ட திருமாலே - எண்ணுதற்குஅரிய பெருமைபடைத்த திருமாலே! நீ-ஸர்வாதிகனான நீ, அன்று - (ஆச்ரிதனான இந்திரன் கண்ணீருடன் திருவடிகளில் விழுந்த) அக்காலத்தில் (மகாபலியினிடம் யாசகனாய்ச்சென்று இரந்து), உலகு - லோகத்தை, அளந்தாய்— (திருவடிகளாலே) அளந்துகொண்டாய், (என்றும்), அன்று - (பூமி பிரளயக்கடலிலே யகப்பட்டு அண்டபித்தியிலே யொட்டின) அன்று, நீ-ரக்ஷகனான நீ, உலகு இடந்தாய்-(மகாவராஹமாகிப் பிரளயக்கடலிலேமுழுகி)இடந்தெடுத்துக்கோண்டேறினாய்,(என்றும்), நீ—ஸர்வசக்தியான நீ, அன்று - (துர்வாஸரிஷியின்சாபத்தாலே தேவர்களின் ஸம்பத்தெல்லாம் ஸமுத்திரத்திலே சென்று ஒளித்துக்கொண்ட) அப்போது, கார் ஓதம் முன் கடைந்து - கருநிறமுள்ள சமுத்திரத்தை முற்படக்கடைந்து, (பிராட்டியைப்பெற்று), பின்-பின்பு, (அப்பிராட்டியை ராக்ஷஸப்பயல் கவர்ந்துசென்றானாக அவளை மீட்கும்பொருட்டு), மா கடலை அடைத்தாய் - பெரிய சமுத்திரத்தை அணைகட்டித்தீர்த்தாய், என்பர்—என்றுஞ்சொல்லுவார்கள்,(உனது தன்மையை யறியவல்ல ப்ராமாணிகரான ருஷிகள்);(எ-று)

இப்பாசுரத்திலே, ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தையும் இராமாவதாரத்தையும் அநுஸந்தித்த ஆழ்வார், மற்றும் சில அவதாரங்களிலும் அவ்வெம்பெருமானது திவ்ய சேஷ்டிதங்களிலும் தம்மனஞ்சென்று ஈடுபட்டு, 'இவை சில எம்பெருமான் சேஷ்டிதங்கள் இருக்கும்படியே!' என்று விஸ்மிதராய் அருளிச்செய்கின்றன ரென்க. 'பேரோத மேனிப் பிரான் - காரோதமுன்கடைந்து' என்ற இடத்துக்கடைகிறபோது ஒருகடலை மற்றொருகடல் நின்று கடைந்தாற்போலே யிருந்ததென்பது பெறப்படும். என்பர் என்பது அளந்தாய், இடந்தாய், அடைத்தாய் என்ற மூன்றிடத்தும் சென்று இயையும். நீண்ட திரிவிக்கிரமனாய் நீண்ட எனினுமாம். (௩௰)

31. பிரானென்று நாளும் பெரும்புலரி யென்றும்
குரானற் செழும்போது கொண்டு - வராகத்
தணியுருவன் பாதம் பணியுமவர் கண்டீர்
மணியுருவங் காண்பார் மகிழ்ந்து.

(இ - ள்.) பிரான் என்றும் - (விஷயாந்தரங்களில் மண்டிக்கைகழிந்துபோன என்னைத் தன்னிடத்து ஆபிமுக்யத்தையுண்டாக்கி ருசியைப்பிறப்பித்த) உபகாரகனேஎன்றும், நாளும் பெரும்புலரி என்றும்-(பழுதேகழிந்துபோன) நாள்களிலும் பகவானுடைய அநுபவத்துக்குஏற்ற) நல்விடிவு(உண்டாவதே!) என்றுங் கொண்டாடி, குரா நல் செழும் போது கொண்டு - குராவினுடைய அழகிய செழிப்புள்ள பூவைச் சம்பாதித்துக்கொண்டு, வராகத்து அணி உருவன் - வராகஸ்ஜாதீயமாய் அழகே ஒருவடிவெடுத்தாற்போன்றுள்ளவனான எம்பெருமானுடைய, பாதம் - திருவடிகளை, பணியுமவர் கண்டீர் - (அஹங்காராதிகள்நீங்கப்பெற்று) வணங்குபவர்களே, மணி உருவம் - (அந்தஎம்பெருமானுடைய) நீலரத்நம்போல இருண்டுகுளிர்ந்துள்ள (அப்ராக்ருதமான) திருவுருவத்தை, மகிழ்ந்து காண்பார் - உகந்துகண்டுஅநுபவிக்கப்பெறுவார்கள்; (எ - று.)

ஆபத்ஸகனானஎம்பெருமான் திருவடிகளில் புஷ்பாதிகளான உபகரணங்களைக்கொண்டு ஆஶ்ரயிக்குமவர்கள் அப்ராக்ருதமான அப்பரமனது திருமேனியை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப்பெறுவ ரென்பதாம். இங்கு, எம்பெருமானையாஶ்ரயிக்குந் தசையோடு அநுபவ தசையோடு எல்லாம் இனியவாயிருக்கு மென்பது, பெறப்படுமை காண்க. (௩௧)

32. மகிழ்ந்தது சிந்தை திருமாலே! மற்று
மகிழ்ந்ததுன் பாதமே போற்றி,—மகிழ்ந்த
தழலாழி சங்கமவை பாடி யாடுந்
தொழிலாகஞ் சூழ்ந்து துணிந்து.

(இ - ள்.) திரு மாலே - (தன்னையநுஸந்தித்தவர்களைச் சேர்த்தியழகாலே மகிழப்பண்ணுகின்ற) ஶ்ரிய: பதியே! சிந்தை-(என்)மானது, சூழ்ந்து - (உன்னையே த்யானித்து, துணிந்து - (இதுவே நமக்குக் கர்த்தவயம்' என்று) நினைத்து, மகிழ்ந்தது - (அதனால்) மகிழ்ச்சி யடைந்தது ; மற்று - (அதன்பின் சொல்லக்கடவ) வாக்கு, உன் பாதமே போற்றி-(ச்ரிய: பதியான) உன்னுடைய திருவடிகளையே யேத்தி, மகிழ்ந்தது—; ஆகம்-(என்னுடைய) தேஹமானது, அழல் ஆழி - (எதிரிகளின்மேலே) நெருப்பையுமிழ்கின்ற (சுதரிசனமென்ற) சக்கரப்படையும், சங்கம்—(தன் முழக்கத்தாலே எதிரிகளை மனம் விண்டு மாளும்படி செய்யவல்ல பாஞ்ச சனியமென்னுஞ்) சங்கமும் என்கிற, அவை அவற்றை, பாடி - கொண்டாடிப் பாடி, ஆடும் - ஆடுகையாகிற, தொழில் - தொழிலிலே, மகிழ்ந்தது;—(எ - று.)

இப்பாசுரத்திலே எம்பெருமானை யாஶ்ரயித்தவர்கள் அப்பரமனது அப்ராக்ருதமான திருமேனியை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப் பெறுவ ரென்று உபதேசித்த ஆழ்வார், இதனால், தம்முடைய மனோவாக்குக்காயங்களாகிற மூன்றுகரணங்களும் அப்பரனிடத்துப் பிறருபதேஶமில்லாமலே ப்ரவணமானபடியை யருளிச்செய்கின்றார், "மந: பூர்வோ வாக்உத்தர:" என்றபடிமனம் முதலிற் சென்ற இடத்துப் பின்பு வாக்குச்செல்லுதல் இயல்பாதலால், வாக்கை 'மற்று' என்பதனாற் குறித்தார். 'மற்றும்' என்று இறந்தது தழுவிய எச்சவும்மைசேர்த்து ஓதுவதும் உண்டு 'சூழ்ந்து துணிந்து' என்பதை முதலடியில்கொண்டுகூட்டாமல், 'த்யானித்து' என்னும் பொருளுள்ள சொல்லொன்றை யத்யாஹரித்து, ஆகம் பாடியாடுந்தொழிலிலே சூழ்ந்து வ்யாபித்துத் துணிந்து மகிழ்ந்தது என்று சேர்த்து உரைகூறுதலும் உண்டு. (௩௨)

33. துணிந்தது சிந்தை துழாயலங்க லங்க
மணிந்தவன்பே ருள்ளத்துப் பல்கால்-பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல்வேங் கடவனையே
வாய்திறங்கள் சொல்லும் வகை.

(இ - ள்.) சிந்தை - (என்) மனமானது, துழாய் அலங்கல் அணிந்தவன்- திருத்துழாய் மாலையால் அலங்ருதனான பெருமானுடைய, பேர் - திருநாமங்களை, பல் கால் - பல

முறை, உள்ளத்து - நினைப்பதில், துணிந்தது—த்ருடமாக அத்யவஸித்தது ; அங்கம் (உம்)—(என்) உடம்பும், (பல்கால்)—ஸர்வகாலமும், பணிந்தது—வணங்குவதாயிராநின்றது ; வாய் (உம்)—(என்) வாக்கும், வேய் பிறங்கு சாரல் - மூங்கில் மிக்கிருக்குஞ் சாரலைக்கொண்டுள்ள, விறல் வேங்கடவனை, (நம்மைத் தனக்கு அடிமையாக எழுதிக்கொள்ளும் மிடுக்கையுடையவனான திருவேங்கடமலையி லெழுந்தருளியிருக்கின்ற பெருமானுடைய, திறங்களே —ஸ்வரூபம் குணம் முதலியவற்றின் தன்மைகளையே, (பல்கால்), சொல்லும்-சொல்லுகின்ற, வகை ப்ரகாரத்திலே, (துணிந்தது)—; (எ - று.)

இப்பாசுரத்திலே தம்முடைய த்ரிவிதகரணங்களும் திருமாலினிடத்து மகிழ்ந்து ப்ரவணமானபடியை யருளிச்செய்த ஆழ்வார், இங்கு அந்தக்கரணங்கள் மூன்றும் அவனையல்லது வேறிடத்துச் செல்லாத்தன்மையை மேற்கொண்டதை யருளிச்செய்கின்றனரென்க. சாரல் என்பது வேங்கடவன் என்பதிலுள்ள 'வேங்கடம்' என்பதைத் தழுவும். (௩௩)

34. வகையா லவனி யிரந்தளந்தாய் பாதம்
புகையா னறுமலரான் முன்னே - மிகவாய்ந்த
வன்பாக்கி யேத்தி யடிமைப்பட்டேனுனக்
கென்பாக்கி யத்தா லினி.

(இ - ள்.) முன்னே - முற்காலத்திலே, வகையால் - (அனேக) விதங்களைக் கருதியதனால், அவனி இரந்து அளந்தாய் - பூமியை (மஹாபலிசக்கரவர்த்தியினிடத்திலிருந்து) யாசித்துப் பெற்று அளந்துகொண்ட உன்னுடைய, பாதம் - திருவடிகளை, புகையால் - தூபத்தாலும், நறுமலரால் - நறுமணமுள்ள மலர்களைக் கொண்டும், மிக வாய்ந்த அன்பு மிகுதியாகப் பொருந்தின, ப்ரீதியை, ஆக்கி - செய்து, ஏத்தி - துதித்து, இனி - மேலுள்ளகாலமெல்லாம், என் பாக்கியத்தால்— (நீ) என்னிடத்துப்பண்ணிய (விசேஷகடாக்ஷமாகிற) பாக்கியத்தாலே, உனக்கு - (வகுத்தசேஷியான) உனக்கு, அடிமைப்பட்டேன் - அடிமைசெய்பவனாய்விட்டேன் ; (எ - று.)

இங்ஙு அருளிச்செய்தபடி தம்முடைய கரணங்கள் அவனையே பற்றியமைக்குக் காரணம் - அந்த எம்பெருமான் மஹாபலிசக்கரவர்த்தியினிடத்தினின்று பூமியை மீட்டு இந்திரனுக்குத்தருவதென்ற வியாசத்தால் தான் ஸ்ரீயஃபதியென்ற பெருமையையும் சிறிதும் கருதாமல் இரப்பாளனாகி எல்லார் சிரசிலும் அடிவைத்தாற்போல என்தலைமேலும் தனது திருவடிகளை வைத்து விசேஷகடாக்ஷஞ் செய்ததனாலேயாகு மென்று, இதனால் அருளிச்செய்கின்றாரென்க. புகையால்நறுமலரால் அன்பாக்கி அடிமைப்பட்டேனென இயையும். 'என்பாக்கியத்தால்' என்பதற்கு - என்னுடைய ஸுக்ருதவிசேஷத்தாலே யென்றே பொருள்கூறலுமொன்று ; அப்போது, வகையால் அவனி இரந்து அளந்தாய் என்பதற்கு - எனக்கு உன்னைப்பற்றுவதாகிய ஸுக்ருதம் தோன்றும் விதமாகப் பூமியை யளந்துகொண்டாயென்க எம்பெருமான் த்ரிவிக்ரமாவதாரஞ் செய்து உலகளந்தது தம்மைத் திருத்திப் பணிகொள்வதற்காகவேயென்று இவ்வாழ்வார் அநுசந்திக்கின்றன ரென்க.

இனி, வகையால் என்பதற்கு - தந்திரத்தாலேயென்று பொருளுரைத்து - 'மஹாபலி சக்கரவர்த்தியும் தேவர்களின் விஷயத்திலே தீங்குசெய்ததால் இராவணனைப்போலவே கொல்லத்தக்கவனாயிருக்கவும், உதாரகுணத்தை மேற்கொண்டிருந்ததனால் இவனைக்கொல்லவேண்டா என்று கொண்டு, அந்தப்பலிசக்கரவர்த்தியும் தன்னதென்று கொடுக்க நாமும் அவனதென்றே இந்தலோகத்தைக் கொள்வோம் : அப்போது அந்தமகாபலியைக்கொல்லாமலே பூமியை அவனிடத்தினின்று தேவேந்திரனிடத்துச் சேர்ப்பித்ததாகிய தொழிலும் எளிதிற் கைகூடுமென்று நினைத்து உபாயத்தினால் இரத்தலை மேற்கொண்டு காரியத்தைச்சாதித்தாயென்று கருத்து உரைக்கலுமாம். அன்றி வகையால் - வடிவழகு மழலைச்சொல் மனத்தைக்கவரவல்லசெயல் என்னும் இவற்றையுடையவனாய் என்று உரைத்தலும் ஒன்று. (௩௪)

35. இனிதென்பர் காம மதனிலு மாற்ற
வினிதென்பர் தண்ணீரு மெந்தாய் - இனிதென்று
காமநீர் வேளாது நின்பெருமை வேட்பரேற்
சேமநீ ராகுஞ் சிறிது.

(இ - ள்.) எந்தாய்—(தாரகமும் போஷகமும் போக்யமும் நீயேயாம்படி என்னை நியமித்துவைத்த) எம்ஸ்வாமியானவனே ! காமம் - (அல்பமும் அஸ்திரமும் அபோக்யமுமான) சப்தாதிவிஷயங்களை, (மிகவும் போக்யமானவையென்று நினைத்து), இனிது என்பர் - (இந்தசப்தாதிவிஷயங்கள்) இனிமையானவையென்று (விஷயங்களை அநுபவிப்பதற்காகவே பாடுபடுகின்றநாட்டிலுள்ளார்) சொல்லாநிற்பார்கள் ; (வைராக்கியம்பிறந்தவரும் வைராக்கியம் பிறவாதவரும் ஆகிய எல்லாரும் விரும்பும்படியிருக்கையாலே), தண்ணீரும் - தண்ணீரைக் குறித்தும், அதனிலும் - அந்தசப்தாதிவிஷயங்களைக்காட்டிலும், ஆற்ற - மிகவும், இனிது என்பர் - இனிமையானதென்று சொல்வார்கள் ; (ஆராய்ச்சியுடையபெரியோர் மிகவும் ஈனமானவையென்று நிச்சயத்திருக்கிற), காமம் - சப்தாதிவிஷயங்களையும் நீர் - தண்ணீரையும் இனிது என்று, வேளாது - (விபரீதஞானத்தாலே போக்யமென்று நினைத்து அவைகளில்) மேல்விழுந்து ஆசைப்படாமல், நின் பெருமை - (ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் நிரதிசயபோக்யனான) உன்னுடைய மிக்கபோக்யதையை, வேட்பர் எல் - விரும்பி மேல் விழுவார்களாயின், (அது), சேமம் - (எல்லாநிலைமையிலும்) ரட்சகமான, நீர் ஆகும் - ஸ்வபாவத்தையுடையதாகும் ; (எ - று.)

அல்பம் ஆநுகூல்யம் ஒருவனிடத்து இருந்தாலும் அதையே ஆதாரமாகக்கொண்டு மேல்விழுந்து ரட்சிக்கின்ற ஸர்வகுணாத்மகனாய் நிரதிசயபோக்யனான நீ யிருக்கையில், நாட்டிலுள்ளவர் உன்னையே தாரக போஷகபோக்யங்களாகப்பற்றாமல் சப்தாதிவிஷயங்களிலே மண்டித்திரிகின்றார்களே என்று உலகத்தார் செயலை வெறுத்து, உன்னைப்பற்றுவதே எல்லார்க்குந்தஞ்ச மென்ற சித்தாந்தத்தை வெளியிடுகின்றாரென்க. இவ்வாழ்வார்க்கு காமமும் தண்ணீரும் எம்பெருமானாகவே யிருக்கையாலே எந்தாய் என்கின்றனர் ; "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்று அருளிச்செய்வர், நம்மாழ்வாரும்.

பாக்யஹாநிஅடியாகவிறே அதஸ்மிந்ஸ்தத்புத்தி பண்ணி சப்தாதிவிஷயங்களிலே ருசி பிறப்பது;........................காமத்திலும் தண்ணீரிலும் ஆசைப்படாதே உன்னுடைய்குணங்களிலே அல்பம் ஆசைப்படுவராகில் ரகைஷயே ஸ்வபாவமாம். "புத்திநாசாத் ப்ரணச்யதி" என்கிறபடியே சப்தாதிகளில் ஆசை விநாசத்தைப்பிறப்பிக்கும்: 'மித்ரபாவேந" என்று பகவத்விஷயத்திலே போலியான ஆசையுண்டாகிலும் "நத்யஜேயம் கதஞ்சந" என்றிருக்கும் அவன்" என்பது பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம். காமம் - எல்லாராலும் விரும்பப் படுகின்ற சப்தாதிவிஷயங்கள். காமம் என்றசொல்லுக்கு 'ஏற்பஇனிது' என்ற ஒருமைமுற்று வந்தது (௩௫)

36. சிறியார் பெருமை சிறிதின்க ணெய்து
மறியாருந் தாமறியா ராவ - ரறியாமை
மண்கொண்டு மண்ணுண்டு மண்ணுமிழ்ந்த மாயனென்
றெண்கொண்டென் னெஞ்சே யிரு.

(இ - ள்.) சிறியார் - (இயற்கையானமேன்மை சிறிதுமில்லாமல்) அற்பரான ஸம்ஸாரிகளுடைய, பெருமை —(நான்தான் ஈசுவரன், என்கிற மசருக்கால் வந்த) மேன்மை, சிறிதின்கண் - (தமக்குப்பழமையாயுள்ள)தாழ்குணத்தில்தானே,எய்தும் - சேர்ப்பிக்கும், அறியாரும் - (தாமாக இதுநல்லது இதுதீயது என்று பகுத்தறியவல்ல) அறிவுஇல்லதாவரும், தாம் - தாங்கள், (தங்களை ஸர்வஜ்ஞராக நினைத்திருந்தார்களாகிலும்), அறியார் ஆவர் - (தம்முடைய பழமையான) அறிவுகேட்டையுடையராகவே யிருப்பார்; 'நான் எம்பெருமானது தன்மையை யெடுத்துச்சொன்னால் அதனை யறிதற்கு ஏற்ற நன்மையைக் கொண்டிருக்கிற), என் நெஞ்சே-என்மனமே! அறியாமை - (திருமால்தான் இப்படி வாமனவேஷங்கொண்டு இரப்பாளனாய்வந்தான்என்று) பிறர் அறியாதபடி, மண் கொண்டு- பூமியை யிரந்து அளந்துகொண்டு, மண் உண்டு - (அந்தப்) பூமியை (ப் பிரளயத்திலழியாதபடி) திருவயிற்றிலேவைத்துப் பாதுகாத்து, மண் உமிழ்ந்த-(பிறகுஅந்தப்) பூமி உள்ளேதானேகிடந்து தளராதபடி வெளிநாடுகாணும்படி) வெளிப்படுத்திய, மாயன் என்று (ஆச்ரிதவிஷயத்திற் செய்கின்ற ரக்ஷணமாகியசெயலில் ஓரளவில்நில்லாதபடி) ஆச்சர்யகாரனாயிருப்பவனென்று, எண் கொண்டு - இடைவிடாது கருதி, இரு - (அவனைப்பற்றின நமக்கு ஒருகுறையில்லை யென்று) நிர்ப்பரனாக இருப்பாயாக; (எ - று.)

நாட்டிலுள்ளார் ஸப்தாதிவிஷயங்களைவிரும்பி மேல்விழுதல், தம்மையே ஈசுவரனாக்கருதுதல் முதலியனசெய்துகொண்டு இருந்தபடி இருக்கட்டும்; நீ முன்னம் அவ்வெம்பெருமானுடைய வியாபாரங்களை யநுசந்தித்துக்கொண்டு இனிதாகவிருஎன்று தம்முடைய மனத்தைநோக்கி ஆழ்வார உபதேசிக்கின்றன ரென்க. சிறியார்பெருமை சிறிதின்கணெய்தும் என்றது - அற்பரானபிரமன்முதலியோரைப் பெருந்தலைமை [ஈசுவரத்துவம்] உடையவராகமதிப்பது நம்மைத் தாழ்ந்தநிலையிற் சேர்ப்பிக்கு மென்றபடி. அறியாருந் தாமறியாராவரென்பது—அல்பஅஸ்திரத்வாதிகளான குற்றமுள்ள சப்தாதிவிஷயங்களில் போக்யதையுள்ளதாக ப்ரமிக்கிற ஸம்ஸாரிகள் மேன்மேலும் அறியாமைமிஞ்சிக் கெடுவதன்றி ஈடேறும்வகையில்லை யென்றபடி. அறியாமை - எதிர்மறைவினையெச்சம்:

எய்தும்—எய்துவிக்கும் பிறவினையில்வந்ததன்வினை: இவ்வாறுவருவதனை வடநூலார் 'அந்தர்ப்பாவிதணிச்' என்பர். (௩௬)

37. இருந்தண் கமலத் திருமலரி னுள்ளே
திருந்து திசைமுகனைத் தந்தாய் - பொருந்தியநின்
பாதங்க ளேத்திப் பணியாவேற் பல்பிறப்பு
மேதங்க ளெல்லா மெமக்கு.

(இ-ள்.) இரு - பெரிய, தண் - குளிர்ந்த, கமலத்து - திருநாபீகமலத்தின், இரு மலரினுள்ளே - பெருமைபெற்ற பூவில், திருந்து - (மீண்டும் ஐயங்கொண்டு தான்செய்ய வேண்டுவனவற்றைப்பற்றிக் கேட்டுக்கொண்டிராமல் ஒருமுறை நியமித்ததுக்கொண்டு ஸ்ருஷ்டித்தொழிலைச் சரியாகச்செய்யும்படி) ஸமர்த்தனான, திசைமுகனை - நான்கு முகங்களையுடைய பிரமாவைதந்தாய் - (ஸருஷ்டிப்ரயோஜநம் என்விஷயத்திற்பலிக்கும்படி உபகரித்தவனே! பொருந்திய - (அசேஷலோக சரண்யனாகி எல்லாரோடும்) பொருந்தியிருக்கிற, நின் - உன்னுடைய, பாதங்கள் - திருவடிகளை, - ஏத்தி - வாயாரத் துதித்து, பணியாஏல்- தலையார) வணங்கியாச்ரயிப்பதற்கு உறுப்பாகாவிட்டால், எமக்கு- எங்கட்கு, பல் பிறப்பும் எல்லாம் - பலவகையாகப் பிறக்கின்ற பிறவிகளெல்லாம், ஏதங்கள் - பயனற்றனவேயாம்; எ - று.)

கீழ்ப்பாசுரத்திலே அருளிச்செய்தபடி எம்பெருமானை ஆச்ரயிக்காத பிறவிகள் யாவும் நிஷ்ப்ரயோஜநங்க ளென்பதாம். பலஜந்மங்களையும் ஆத்மாக்களுக்கு எம்பெருமான் உண்டாக்குவது, ஒருஜந்மத்திலில்லாவிட்டாலும் ஒருஜந்மத்திலாவது இவை நம்மை ஆச்ரயித்து ஈடேறவேணுமென்னும் விருப்பத்தினாலேயே: அது சித்தியாதபோது ஆத்மாக்களுக்கு நேர்கின்றபிறவிகள் வியர்த்தமே யென்க. இனி பின்னிரண்டிகட்கு—எனக்கு நேர்ந்த பல பிறவிகளும் உன் நினைவின்படி உன்னை ஆச்ரயிப்பதற்கு உறுப்பாகவேணும்; அங்ஙனம் ஆகாவிடின் உலகத்துப் பல்பிறவியிற் பிறக்கின்ற உயிர்களின் துயரமெல்லாம் (என்னொருவனுக்கு) உண்டாகுமென்று கருத்துக்கூறுதலுமுண்டு. ஏதங்கள் - துக்கங்கள். திசைமுகனைத் தந்தாய் என்று திருமாலை விளித்தது, அவனே சரண்யனென்று தோற்றுகைக்காக; "யோப்ரஹ்மாணம் விதயாதிவ-பூர்வம் [எவன் பிரமனை முன்பு உண்டாக்கினனோ,]" "முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே (அப்படிப்பட்டவனை) முமுட்சுவாகிய நான் சரணமாகப்பற்றுகின்றேன்]" என்றது காண்க. (௩௭)

38. எமக்கென் றிருநிதிய மேமாந் திராதே
தமக்கென்றுஞ் சார்வ மறிந்து - நமக்கென்றும்
மாதவனே யென்னும் மனம்படைத்து மற்றவன்பே
ரோதுவதே நாவினா லோத்து.

(இ-ள்.) (அயலார் எப்போது நாம் இந்தத் திரவியத்தை யடித்துக்கொண்டுபோகலாமென்று சமயம்பார்த்திருந்ததற்குக் காரணமான), இரு நிதியம் - பெருஞ்செல்வத்தை

எமக்கு என்று - (இந்தச் செல்வம்) நமக்கே உரிமையானது என்று நினைத்து, (ஸர்வேச்வரனைப் பற்றினரைப்போலே), ஏமாந்திராதே - (தம்முடைய அறிவுகேட்டினால்) மனச்செருக்குக் கொண்டிராமல், - என்றும் - (தாம் அறிந்தபோதோடு அறியாதபோதோடு வாசியற எக்காலத்தும், என்றும் - காலதத்துவமுள்ளவரைக்கும், தமக்கு சார்வம் - தாம் ஆச்ரயிக்கவேண்டிய பொருள், மாதவனே - ச்ரிய:பதியானவனே, என்னும் - என்று துணிந்திருக்கிற, மனம் - மனத்தை, படைத்து - பெற்று,— மற்று - அதற்குப் பின்பு, அவன் பேர் - அந்தத் திருமாலினுடைய திருநாமங்களை, சொல்லுவதே—, நாவினால் ஓத்து - நாவுக்கு ஓதுதற்கு உரிய விஷயம் ; (எ - று.)

செல்வமென்பது எப்போதும் அநர்த்தத்தையே யுண்டாக்குவதாகையால், அதனைப் புருஷார்த்தமாகமதியாமல் திருமாலை நினைத்து ஏத்தி ஆச்சிரயிப்பதே எப்போதும் யாவரும் செய்யத்தக்க தொழிலென்கிறார். சார்வு என்பது அம்முச்சாரியை பெற்று 'சார்வம்' எனவந்தது.

39\. ஓத்தின் பொருண்முடிவு மித்தனையே யுத்தமன்பே
ரேத்துந் திறமறிமி னேழைகா - ளோத்ததனை
வல்லீரே னன்றதனை மாட்டீரேன் மாதவன்பேர்
சொல்லுவதே யோத்தின் சுருக்கு.

(இ-ள்.) ஏழைகாள் - (கண்ட கண்ட தேவதைகள் கால்களிலெல்லாம் விழுகின்ற அறிவுகேடர்களே ! உத்தமன் பேர் ஏத்தும் திறம் இத்தனையே - (எல்லாப்பொருள்கட்கும் தான்) விசேஷ்யமாய் நிற்கிற ச்ரிய:பதியினுடைய திருநாமத்தையேத்துகின்ற கூறுபாடாகிய இதுவே, ஓத்தின் முடிவு பொருள் உம்-வேதத்திற் கூறிய தீர்ந்தபொருள்; ஓத்ததனை வல்லீர் ஏல் - வேதத்தின் தேர்ந்தபொருளை அறிவதற்குஏற்ற புத்தி வல்லமையையுடையீர்களானால், அறிமின் - (யான் சொல்வதை உண்மை யென்று) தெரிந்துகொள்ளுங்கோள் ; அதனை நன்று மாட்டீர் ஏல் - அவ்விஷயத்தை நன்கு ஆராய்ந்தறிகின்ற புத்தி வல்லமையில்லாதவராயிருந்தால், ஓத்தின் சுருக்கு - வேதத்தினுடைய ஸங்க்ரஹமான அர்த்தம், மாதவன் பேர் சொல்லுவதே - லக்ஷ்மீபதியினுடைய திருநாமத்தைச் சொல்லுகையேயாம் ; (எ-று.)

இந்திரன் முதலிய தேவர்களையும் ஆச்ரயணீயரென்று வேதத்தில் ஆங்காங்குச் சொல்லியிருக்க, மாதவனே யென்னும் மனம்படைத்து அவன்பேரோதுவதே நாவினாலோத்து "என்று நீர் எப்படிச் சொல்லலாமென்று சிலர் ஆட்சேபிக்க, இதனால் அதற்குச் சமாதானங் கூறுகின்றனர்: நீங்கள் கேவலம் சொற்பொருளைமாத்திரம்பார்த்து ஒரு முடிவுக்கு வரக்கூடாது ; தாத்பர்யார்த்தத்தை ஆராய்ந்துபார்த்தால் வேதைச்சஸர்வைரஹமேவவேத்ய:" என்று ஸ்ரீமந் நாராயணன் அருளிச்செய்தபடியே அவனே தாத்பர்யமாவன் ; இவ்விஷயத்தை ஸாங்கவேதாத்யயனம்பண்ணி வேதாந்தத்தை அறுதியிடவல்ல ஸாமர்த்யம் உங்கட்கு இருந்தால் தெளியலாம். அப்படிப்பட்ட சக்தி உங்கட்கு இல்

லாவிட்டால், அந்தப்பகவானது திருவருளாலே ஞானமடைந்தவர் சொன்ன விஷயத்தை நம்பி யிருத்தலே செய்யத்தக்கதென்கிறார்.

இனி, இந்தப்பாசுரத்திற்கு வேறு வகையாக உரை கூறுவது முண்டு: அக்கருத்து வருமாறு:—ஸாங்கவேதாத்யயனம் பண்ணி அதிற் சொல்லுகிற அர்த்தங்களையறிந்து அதன்படியே பகவானிடத்துப் பக்திசெய்ய வல்லமையுடையீர்களானால் புருஷோத்தமனுடைய "அவன்பெயரெட்டெழுத்தும்" என்கிற திருமந்த்ரத்தை ஆய்ந்தேத்துகையாகிற இதுவே வேத தாத்பர்யம் ; இப்படி அதனை நன்றாக அறிந்து பக்திசெய்ய வல்லமையில்லாதவராயின் 'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம்ப்ரபத்யே' என்று ஸ்ரீய:பதியையாச்ரயியுங்கோள்: இவ்விரண்டுவகையில் ஒன்றே எம்பெருமானை ஆச்ரயிப்பதற்கு உரிய வழியென்று ஆச்ரயணத்தை அதிகாராநுகுணமாக இரண்டுவகையாக விதிக்கிறாரென்பது. இரண்டாவது சொன்னதை ஓத்தின் சுருக்கு என் கையாலே, முதலிற் சொன்னது - வேதத்திற்பரக்கக்கூறிய விஷயமென்பது, பெறப்படும். (௩௯)

40\. சுருக்காக வாங்கிச் சுலாவிநின் றையார்
நெருக்காமுன் நீர்நினைமின் கண்டீர் - திருப்பொலிந்த
வாகத்தான் பாத மறிந்து மறியாத
போகத்தா லில்லை பொருள்.

(இ-ள்.) சுலாவிநின்று - (உடம்பு முழுதும்) சூழ்ந்துகொண்டுநின்று, ஐயார் - ச்லேஷ்மமானது, (சரீரத்தைவிட்டு ஆத்மா பிரியும்போது), சுருக்காக - (கண்டஸ்தாநத்திலே) நெருக்கமாகநின்று, வாங்கி - வலித்திழுத்துக்கொண்டு, நெருக்காமுன் - (பேசுதற்கு வாயைத் திறக்கமுடியாதபடி மிடற்றைப்பிடித்துக்கொண்டு) நெருக்குவதற்குமுன்பே, திரு பொலிந்த ஆகத்தான் பாதம்-பெரிய பிராட்டியாராலே விளங்குகின்ற திருமார்பையுடைய ஸர்வேச்வரனுடைய திருவடிகளை, நீர் நினைமின் - நீங்கள் அநுஸந்தியுங்கள் ; அறிந்தும் - (பகவத்விஷயத்தை) அறிந்தவராயிருந்தும், அறியாத - அறியாதவரைப் போல (உங்களைச்) செய்யவல்ல, போகத்தால் - சப்தாதிவிஷயங்களால், பொருள் - ஒரு ப்ரயோஜநமும், இல்லை—; (எ - று.)

உங்களுடைய தேஹம் ஸ்திரமல்ல ; ஆகையால், சரமதசை வருவதற்கு முன்னமே ஸமஸ்தவேததாத்பர்யனான ஸ்ரீமந்நாராயணனைக் கடுக ஆச்ரயியுங்கோள் ; சப்தாதிவிஷயங்களை நம்பினாலோ அநர்த்தமே பலிக்குமென்று உலகத்தார்க்கு உபதேசிக்கின்றனரென்க. ஆகம் - திருமேனியுமாம். அறிந்தும் அறியாத போகத்தால் என்பதற்கு - பொல்லாதவையென்றறிந்தும் கைவிடமுடியாத சப்தாதி விஷயங்களால் என்றுமாம். போகம் - அர்த்தசுகமுமாம். ச்லேஷ்மமென்ற பொருளுள்ள 'ஐ' என்பது பெற்றது, செறலினால் திணைமாறி வந்ததிணைவழுவமைதி. ஆர் விகுதி, கண்டீர் - முன்னிலையசை. (௪௦)

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீவேதாந்ததேசிகர்ஸபை–திருவஹீந்திரபுரம்.

மூன்றாவது வார்ஷிக மஹோத்ஸவம்.

இம்மஹோத்ஸவம் நாளது புரட்டாசிமீ 2உ (18—9—23)ல் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ப்ரம்மோத்ஸவத்தின் 7-வது திருநாளில் ஆரம்பித்து ஷை மீ 7உ (23—9—23)யில் முடிவுபெற்றது. ஸ்ரீ. உ. வே. வித்வான் கோஷ்டீபுரம் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி ஸபையோரின் வேண்டுகோளுக்கிணங்கி, இவ்வார்ஷிக ஸங்கத்தில் அக்ராஸநம் வஹித்தருளினார். இந்த தினங்களில் ஸ்ரீ. உ. வே. பண்டித பூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசார்யரும் இன்னும் அநேக வித்வான்களும், ஸ்ரீ. உ. வே. ராவ்பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார் (பென்ஷன் ஜட்ஜி) ஸ்ரீ. உ. வே. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலிய அநேக லௌகிக ஆஸ்திகர்களும் சென்னை முதலிய இடங்களிலிருந்து எழுந்தருளியிருந்து ஸபையை அலங்கரித்தார்கள். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ. உ. வே. பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவேதாந்தராமாநுஜ ஸ்வாமி (தேரெழுந்தூர் ஸ்வாமி)யின் ஆச்ரமத்திலிருந்தும், திருக்குடந்தை ஸ்ரீஅஹோபிலமட பாடசாலையிலிருந்தும் இன்னும் வேறு இடங்களிலிருந்தும், அநேக வித்யார்த்திகள் பரீக்ஷைகளில் அந்வயிக்கும் பொருட்டு வந்திருந்தார்கள். வேதபாராயண அத்யாபக கோஷ்டிகளிலும், அநேக ஸ்வாமிகள் வந்து அந்வயித்தார்கள். இப்படி பல ப்ரகாரங்களில் ஸ்வாமிகள் இந்த ஸம்வத்ஸரத்து மஹாஸங்கத்தில் அந்வயித்து, ஸபையின் உத்தரோத்தர அபிவ்ருத்திக்கு ஸூசகமாய் ஸபையோருக்கு அதிக உத்ஸாகத்தைக் கொடுத்தது.

முதல் நாள் ஸபை ஆரம்பித்து, அக்ராஸநாதிபதி தமது ஸ்தாநத்தை வஹித்த பிறகு அவரும் ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம் சேட்டலூர் நரஸிம்மாசார்யர் ஸ்வாமியும் இவ்வர்ஷத்துக்குப் பரீக்ஷாதிகாரிகளாக ப்ரார்த்திக்கப்பட்டு, அவர்களும் அதற்கிணங்கிப் பரீக்ஷைகளை உபக்ரமித்தார்கள். அன்று மாணவர்கள் ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநம், ஸ்ரீந்யாய பரிசுத்தி, ஸ்ரீதேவநாயக பஞ்சாசத், அச்யுதசதகம், பாதுகா ஸஹஸ்ரம் முதலிய க்ரந்தங்களில் பரீக்ஷை கொடுத்தார்கள். மறுநாளும் ஸ்தோத்ர பாடங்கள், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், அதிகரண சாராவளி, ஸங்கல்பஸூர்யோதயம் முதலிய க்ரந்தங்களில் அந்வயித்த மாணவர்களுக்குப் பரீக்ஷை நடந்தது. மூன்றாவது தினமாகிய புரட்டாசிமீ 4உ (20—9—23)யன்று சாஸ்த்ர விசார ரூபமான உபந்யாஸங்களைச் சிலபண்டிதர்கள் செய்தார்கள். ஸ்ரீ. உ. வே. பா, ரங்கராமாநுஜாசார்யர் ஸ்வாமி புருஷார்த்த காஷ்டையைப்பற்றியும் ஸ்ரீ. உ. வே. வில்லிவலம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி பகவானுடைய ‘உபயலிங்கம்’ (ஹேய வஸ்துக்களெல்லாவற்றிலும் விரோதமாகவும், எல்லாகல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமாயுமிருப்பது) என்பதைப்பற்றியும், ஸ்ரீ. உ. வே. நெடுந்தெருவு ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, ந்யாஸவிம்சதியைப்பற்றியும், ஸ்ரீ. உ. வே.

ஈச்சம்பாடி தேசிகாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீகோபால விம்சதியைப் பற்றியும், ஸ்ரீ. உ. வே. தில்லியம்பூர் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் வைபவத்தைப்பற்றியும் உபந்யாஸித்தார்கள். இன்னும் சில வித்யார்த்திகளுக்குப் பரீக்ஷைகள் நடந்தன. புரட்டாசிமீ 6உ (22—9—23) சனிக்கிழமைதினம், வார்ஷிக உத்ஸவ மஹாஸங்கம், பகல் 2-மணிக்கு உபக்ரமிக்கப்பட்டது. பரமைகாந்தி வித்வான் ஸ்ரீ. உ. வே. குப்புஸாமி அய்யங்கார் ஸ்வாமி, ஹம்ஸஸந்தேசத்தைத் தாம் தமிழ்ச்செய்யுளாக வமைத்து எழுதியதைப் படித்துக்காட்டினார். பின்னர், வித்வான்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் உபயகோஷ்டிகளுக்கும் ஸம்பாவனைகள் செய்யப்பட்டன. வேதபாராயணகோஷ்டியில் அந்வயித்தவர்களில் வேதாத்யயநத்தைப் பூர்ணமாய் அதிகரித்திருந்த ஒரு ஸ்வாமி கனம், வர்ணக்ரமம், முதலியவற்றில் தமக்குள்ள நிரதிசய பாண்டித்யத்தைக் காட்டி ஸபையோர்களை மிகவும் ஆநந்திக்கும்படி செய்தார். கோபலவிம்சதியைப்பற்றி உபந்யாஸம் செய்யும் வித்வானுக்கு என்று கள்ளக்குரிச்சி வக்கீல் ஸ்ரீ. உ. வே. தாதாசார்யர் ஸ்வாமி தனியாய்க்கொடுத்திருந்த ரூ. 10-ம் ஸ்ரீ. உ. வே. ஈச்சம்பாடி தேசிகாசார்யர் ஸ்வாமிக்கு ஸம்மானம் செய்யப்பட்டது.

பின்னர், அக்ராஸநாதிபதி ஸ்வாமி தமது உபந்யாஸத்தைச் செய்தருளியதில் நமது ஸித்தாந்தத்தின் பெருமையைச்சொல்ல, வேதத்தின் பூர்வபாகம், இதிஹாஸபுராணங்கள், மன்வாதி ஸம்ருதிகள், ஆசார்யர்களின் பக்திஸ்ரீஸூக்திகள் முதலியவை நமது மதத்தை ப்ரதிபாதிக்கும் ப்ரகாரங்களை விளக்கி, ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன், பலவித அதிகாரிகளுக்கேற்ப பலவித க்ரந்தங்களை சுருக்கமாயும், பெரியதாயும், தர்க்க ந்யாயங்கள் அமைந்ததாயும் அஃதன்றி எளிதாயும், தமிழிலும், ஸம்ஸ்க்ருதத்திலும், பலவிதங்களாக அருளிச்செய்து லோகோஜ்ஜீவநம் செய்தருளியதை விளக்கிவிட்டு, ‘ஶீலவ்ருத்தபலம் ஶ்ருதம்’ (சாஸ்த்ரங் கற்றதற்கு ப்ரயோஜநம், நல்லகுணமும் நல்லொழுக்கமும்), என்கிறபடியே சாஸ்த்ராப்யாஸத்தை ஸதஸ்ஸுகளில் ஸம்பாவனைபெறமட்டும் செய்யாமல், சமதமாதி குணங்களைப்பெருக்கி ஸதாசாராநுஷ்டானங்களைத் தவறாமல் நடத்த உபயோகப்படுத்துவதே ப்ரயோஜநமுள்ள கார்யம் என்னும் அம்சத்தைத்தெளிவாயும் அழுத்தமாயும் உபந்யஸித்தார்.

இதன் பிறகு, ஹை. கோ. வக்கீல் ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர் ஸ்வாமி சென்னைச்சட்டசபையில் தற்போது நிறைவேறியிருக்கும் ஹிந்துமத தர்மஸ்தாபந மசோதாவைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை ப்ரேரணைச்செய்து, ஹிந்து தேவஸ்தாநங்களைக்குறித்து ஆங்கில துரைத்தனத்தார் ஆதி முதல் செய்து வந்திருக்கும் ஏற்பாடுகளையும், 1862ஆமாண்டு ஏற்பட்ட சட்டம் இருக்கும் ப்ரகாரத்தையும், அதை ப்ரஸ்தாப மசோதாமாற்ற எத்தனித்திருக்கும் விதங்களையும், அதனால் நமது தேவாலயங்களுக்கும் மடங்களுக்கும் ஸம்பவிக்கக்

கூடிய விபத்துகளையும் வெகுவிமர்சையாக எடுத்துக்காட்டி, ஹிந்துமதாபிமானிகள் இந்த விபத்தைப்போக்க இத்தருணத்தில் நாடவேண்டிய பரிஹார முறைகளையும் விரித்துரைத்தார். இவரைத்தொடர்ந்து இவ்விஷயத்தைப்பற்றி வேதாந்ததீபிகை பத்ராதிபர் ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் பேசிய பிறகு, இம்மசோதாவைச் சட்டமாக்கக்கூடாதென்று மஹாஸங்கத்தில் தீர்மானித்ததை மேன்மைதங்கியவர்களான ராஜப்ரதிநிதி (viceroy)க்கும் சென்னை கவர்னருக்கும் தந்திமூலமாய்த் தெரிவிக்கவேண்டுமென்றும், பத்ரிகைகளுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும், சட்டசபையில் ஸ்தாநாபேக்ஷகர்களில் இம்மசோதாவைக் கண்டிப்பதாக ஒப்புக்கொள்ளுகிறவர்களையே தெரிந்தெடுக்கும்படி ஓட்டு (vote)க் கொடுக்கும் ஜநஸமூஹங்களுக்கு உபதேசிக்க அங்கங்கே ப்ரசாரமுறைகளைக் கையாடவேண்டுமென்றும் கணக்கற்ற நபர்களிடம் கையெழுத்து மஹஜர்களையனுப்பவேண்டு மென்றும் மஹாஸங்கத்தில் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் ஸ்வாமி, ஸ்ரீ. உ. வெ. தி. ஸ்ரீனிவாஸாசார்யர் ஸவாமி முதலிய வித்வான்களும் மற்ற வைதிகர்களும் இவ்விஷயத்தில் தாங்களுக்குள்ள கவலையையும் தாபத்தையும் பரிஷ்காரமாகக் காட்டி ஷை தீர்மானத்தை ஆதரித்தார்கள். ஸ்ரீ அஹோபில மடத்தின் சார்பாக திவான் ஸ்ரீ உ. வெ. எஸ். டி. க்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதற்காக ஸபையோருக்கு வந்தனமளித்தார்.

அநந்தரம், ஸ்ரீ உ. வெ. பண்டிதபூஷணம் சேட்டலூர் நரஸிம்மாசர்யர் ஸ்வாமி, அக்ராஸநாதிபதியின் குணாதிசயங்களைப் புகழ்ந்து பேசி, வித்வான்களும், வித்யார்த்திகளும், உபயகோஷ்டி கைங்கர்ய பரர்களும் தங்கள் தங்கள் ச்ரமத்தைப் பாராமல் பகவத் பாகவத கைங்கரியத்தையே முக்கியமாகக் கருதி வந்திருப்பதையும் ஸபையில் செய்யப்படும் ஸம்பாவனைகள் த்ரவ்ய ஸஹாயமாகச் செய்யப்பட்டவையல்லவென்பதையும், க்ருதஜ்ஞதைக்கு குறிப்பாகவும் ப்ரதிவர்ஷமும் இப்படியே அவர்கள் எழுந்தருளி ஸபையை நடத்திவைக்க வருவதற்கு ஒரு ஜ்ஞாபகசிந்நமாத்ரமாகவும் செய்யப்பட்டவையென்பதையும், அழகாயும் உருக்கமாயும் உபந்யஸித்தருளி, அக்ராஸநாதிபதிக்குப் புஷ்பமாலை சூட்டி ஸபையின் ப்ரதிநிதியாக ஸம்பாவனையையும் ஸமர்ப்பித்தார். பின்னர் ஸபாதாம்பூலம் வேதகோஷத்துடன் வழங்கப்பட்டு, மஹாஸங்கம் முடிவு பெற்றது.

கடைசி தினமாகிய புரட்டாசிமீ 7உ (23—3—23-ல்) ஸபை அங்கத்தினரின் வர்ஷாந்தக் கூட்டம் நடைபெற்றது. முன் வர்ஷத்திய வ்ருத்தாந்த நிவேதனமும் (report) வரவு செலவு கணக்குகளும் படிக்கப்பட்டு, அடுத்த வர்ஷத்துக்கு வேண்டிய நிர்வாஹ ஸபை அங்கத்தினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இதோடு இச்சபையின் மூன்றாவது வார்ஷிக மஹோத்ஸவ ஸம்பந்தமான கார்யங்கள் முடிவடைந்தன.

அ. வேதாந்தாசார்யார், கார்யதர்சி.

ஸ்ரீ:

ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம்.

உபோத்காதம்.

உலகத்தில் ஜன்மமெடுத்த ஒவ்வொரு வைஷ்ணவருக்கும் அவச்யமாயறியவேண்டிய சாஸ்த்ரார்த்தங்களில் முக்கியமானதும் எல்லாசாஸ்த்ரங்களிலும் அறியவேண்டிய அர்த்தங்களையெல்லாம் சுருக்கிக்காட்டக்கூடியதும் ஆனவை, திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம் என்று சொல்லப்படுகிற மூன்று ரஹஸ்யங்களே என்பது பூர்வாசார்யர்களெல்லோராலும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் அர்த்தங்களை நிரூபிக்குமிடத்து சிலர் பூர்வாசார்ய ஸம்ப்ரதாய ப்ரமாணங்களுக்கு விருத்தங்களாக வ்யாக்யாநம் செய்திருப்பதைத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரமென்னும் ஸர்வ சாஸ்த்ரார்த்த ஸாரமான தமது க்ரந்தத்தில் ப்ரமாண ஸம்ப்ரதாய உபபத்திகளை யநுஸரித்து கீழ்க்கூறிய மூன்று ரஹஸ்யங்களின் அர்த்தங்களை விஸ்தாரமாக நிரூபித்தருளினர். ஸங்க்ரஹருசிகளும் ஸுலபமாய் அதை அநுஸந்திக்கும் பொருட்டும், தமிழ் பாஷை நடையாடாத இடங்களிலிருப்பவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டும், அவர் திருக்குமாரராகிய குமாரவரதாசார்யர் என்ற திருநாமத்தையுடைய ஸ்ரீநைநாராசார்யர், அவ்வர்த்தங்களை ஸம்ஸ்க்ருத பாஷையில் இந்த க்ரந்தத்தில் அருளிச்செய்தார். இவர் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனாகிய தமது திருத்தகப்பனார் திருவடிகளை யாச்ரயித்து ஸர்வார்த்தங்களையும் க்ரஹித்தாரென்பதை ‘விசுத்த பௌஹாவநெஷ்ரெ ஶாவெ மெஷவதாயா வ’ என்று அநுஸந்தித்தார். இவர் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ‘ஸயிகரண ஸாராவஷி’, என்னும் க்ரந்தத்துக்கு ‘ஸயிகரண விஷாஜணி’ என்னும் வ்யாக்யானத்தையும், விரோதி பரிஹாரம், தத்வத்ரய சுளகம் முதலிய சில ரஹஸ்யங்களுக்கு ஸம்ஸ்க்த பாஷயில் மொழிபெயர்ப்பும் செய்திருக்கிறார். அவை அச்சிட்டு வெளியாக்கப்பட்டுள. ‘தகவஶக்ஷா கஶாவ’ த்துக்கு ‘தத்வஶக்ஷா கஶாவ காஷி’ என்னும் வ்யாக்யாநமும், ‘ஶீஶாஂஸாவாஷ’ கைக்கு ஶீஶாஂஸா வாஷகா வரிஶாணம்’ என்னும் வ்யாக்யாநமும் செய்திருப்பதாக திருமுடி யடைவில்

காணப்பட்டபோதிலும் அந்த க்ரந்தங்கள் இப்போது காணப்படவில்லை. ‘புருடன் பணிவரமாக’ என்கிற பாட்டுக்குமாத்திரம் ஸம்ஸ்க்ருத ச்லோக ரூபமான மொழிபெயர்ப்புச் செய்திருப்பதாக ஈடுமுப்பத்தாராயிரத்தின் அரும்பத வ்யாக்யாநத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி அவச்யமாக அறியவேண்டிய ஸாராம்சங்களைத் தெரிவிக்கிற ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளுக்கு உபகாரம் செய்த இவ்வாசார்யச்ரேஷ்டருடைய உபகாரம் என்றும் மறக்கத்தக்கதல்ல. இவர் அருளிச்செய்த க்ரந்தங்களுக்குள் ஸாரதமங்களான ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தங்களைச் சுருக்கமாயும் விசதமாயும் தெரிவிக்கிற இந்த க்ரந்தமும் ஸர்வோபகாரமாவதில் ஸந்தேஹமில்லை. இது மிகவும் எளிதான ஸம்ஸ்க்ருத நடையில் எழுதப்பட்டிருந்தபோதிலும் ஸம்ஸ்க்ருத பாஷையில் பரிசயமில்லாதவர்களும் இந்தப் பெரிய லாபத்தை இழக்கக்கூடாதென்று நினைத்து இத்தமிழ் மொழிபெயர்ப்புடன் இந்த க்ரந்தம் வெளியாக்கப்பட்டது.

இதில், திருவஷ்டாக்ஷரத்தில் பூர்வாசார்யர்களால் காட்டப்பட்ட பத்துவித யோஜனைகளும் தனித்தனியே பிரித்துக்காட்டப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு அவச்யம் காட்டப்படவேண்டிய ப்ரமாணங்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கின்றன. த்வயத்தில் மஹாவிச்வாஸ விரோதிகளான ஐந்துவித ஆக்ஷேபங்களும் அவைகளுக்குப் பரிஹாரங்களும் சுருக்கமாயும் தெளிவாயும் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. சரமச்லோகத்தில் கர்மங்களின் ஸ்வரூபத்தையே விட்டுவிடவேண்டுமென்றும், கைவல்யம் நித்யமானது என்றும் சொல்லுகிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானங்களும், துலங்கக் காட்டியருளப்பட்டன. இத்தால் ‘முமுக்ஷுப்படி’க்கு நவீனமாய் ஏற்பட்ட ஒருடிப்பணியில், ஸ்ரீதேசிகனுக்கும் கைவல்யம் நித்யமென்றே திருவுள்ளம்; ஆனால் அநித்யமென்று அவரருளிச்செய்திருப்பதற்குக் காரணம் என்னவெனில், சிலர்க்குக் கைவல்யத்திலபேக்ஷையுண்டாய் அதனுபாயத்தில் ப்ரவர்த்திப்பார்களோ என்னும் சங்கைதான், என்று காணப்படுகிறது. ஸ்ரீதேசிகன் திருவடிகளிலேயே எல்லா அர்த்தங்களையும் தாம் க்ரஹித்ததை ‘யஸாஷெவ ஸோ ஸவ-ஂ ஶாஹூ ஜூாஷி நாநூக:’ என்று தாமே அநுஸந்தித்த ஸ்ரீமந்நைநாராசார்யருடைய திருவுள்ளத்துக்கு விரோதமாகப்பிறர் ஸ்ரீதேசிகனபிப்ராயத்தைச் சொல்லவருவது விச்வஸிக்கத்தக்கதல்லவென்பது ஸ்பஷ்டம்.

இந்த க்ரந்தத்தின் கடைசியில் ‘வாரணகிரியகுருநாஸி’ என்றாரம்பித்து அருளிச்செய்திருக்கும் ச்லோகமானது ப்ரபந்நஜந ஸந்தான கூடஸ்தரான ஆழ்வார் ‘தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்’ என்றருளிச்செய்ததின் தாத்பர்யத்தையும், அவ்வாழ்வாரது ‘நெடுமாற்கடிமை’யென்னும் திருவாய்மொழியில் அருளிச்செய்த அர்த்தவிசேஷங்களை ஸ்ரீதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் புருஷார்த்த காஷ்டாதிகாரத்தின் கடைசியில் ‘நாயெநம:’ என்னும் ச்லோகத்தில் அருளிச்செய்திருப்பதையும் சேர்த்து ஸங்க்ரஹித்திருப்பது, இவ்வாசார்ய ச்ரேஷ்டரின் பாகவத ப்ரதிபத்தியை வாசிப்பவரின் மனதில் புகிரவிட்டுப் பரவசமாக்கும்படியை ஸ்வாநுபவத்திலேற்பட்டபடி விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறார். இது தான் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஸாரதமமான நிஷ்டை.

திருவஹீந்திரபுரம் சேட்டலூர். நரஸிம்மாசார்யர்.

ஸ்ரீ:

சில சிலா சாஸனங்கள்.

காஞ்சீபுரம் ஹஸ்திகிரியின்மேல் இருக்கும் அருளாளப்பெருமாள்கோவிலின் கீழண்டைச்சுவரிலுள்ள சில சிலாசாஸனங்களிலிருந்து தற்காலம் தாதாசாரியர்கள் என்று வழங்கும் ஆசார்ய புருஷஸந்ததியின் கூடஸ்தரான விஜயநகரம் ராஜகுருவான திருமலைகுமார தாதாசாரியரின் சரிதம்கொஞ்சம் தெரியவருகிறது. இந்தக்குமார தாதாசாரியர் ஸ்ரீமத்வேதமார்க்கப் பிரதிஷ்டாபனாசாரியர் பெரியதிருமலைநம்பி வம்சத்தில்பிறந்த சடமர்ஷணகோத்ரம், ஆபஸ்தம்பஸூத்ரம், யஜுஶ்சாகாத்யாயியான அய்யாவய்யங்கார் பிள்ளையென்று யதோக்தகாரிஸன்னிதியின் இரண்டாவதுபிராகாரம் தென்னண்டைச்சுவரிலிருக்கும் ஒருசிலாசாஸனத்திலிருந்து தெரியவருகிறது. இவர் தன் ஜீவனகாலத்தின் பின்பாகத்தில் காஞ்சீபுரத்திலேயே வாஸம் செய்துவந்தார். இவர், காஞ்சீபுரம் அருளாளப்பெருமாள் கோவிலுக்கும் திருப்பதி, பெருமாள்ஸன்னிதியிலும் அநேக கைங்கர்யம்செய்து, அருளாளப்பெருமாள் கோவிலுக்கு அநேக சிப்பந்திகளைத் தன்கீழ்வைத்துக்கொண்டு தர்மகர்த்ருத்வம் வஹித்துவந்தவரா

கத் தெரியவருகிறது. இவர் அந்நாளில் ஸ்ரீகார்யதுரந்தரர் என்று ப்ரஸித்தி பெற்றிருந்தார்.

கர்நாடகராஜ்யத்தை ஆண்டுவந்த ஸ்ரீரங்கராயருக்கு இவர் குருவாக இருந்ததும் அக்காலத்தில் எட்டூர்குமார தாதாசாரியர் என்ற பெயரால் வழங்கப்பட்டவராக யதோக்தகாரிஸன்னிதியிலிருக்கும் சிலாசாஸனங்களிலிருந்து வெளியாகிறது. ஸ்ரீரங்கராயருக்குப் பின் கர்நாடக ஸிம்மாஸனத்தை அலங்கரித்த வேங்கடதேவமஹாராயருடைய 1565. 66 கி பி. யில் நடந்த பட்டாபிஷேகத்தில் இவர் ராஜகுருவாகவிருந்து ஸகலகார்யத்தையும் நிறைவேற்றிவைத்தார். இந்த வேங்கடபதி மஹாராயருடைய சக ஹூ 1509 முதல் 1527 வரையிலுள்ள சிலாசாஸனங்களில் இவருடையபெயர் ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாசார்ய உபயவேதாந்தஸ்தாபனாசார்ய எட்டூர்குமார தாதா சாரியர் என்று வரையப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸ்ரீரங்கராயர் காலில்காட்டிலும் வேங்கடபதி மஹாராயர்காலத்தில் இவருக்கு அதிககௌரவமும் மரியாதையும், இருந்ததாக இதினால்ஸ்பஷ்டம் ஆகிறது.

ஆசார்யனிடத்தில் அதிக விச்வாஸத்தால் ஸகலராஜ்யத்தையும் இவர் அதீனத்தில் வேங்கடபதிமஹாராயர் விட்டிருந்தார். லக்ஷ்மீகுமார தாதாசாரியர் என்ற பெயராலும் கோடிகன்னிகாதானம் தாதாசாரியர் என்ற பிருதாலும் இவர் வழங்கிவந்தாரென்று அருளாளப்பெருமாள் கோவிலிலிருக்கும் சிலா சாஸனங்களிலிருந்து தெரியவருகிறது. இவர் சக ஹூ 1492 கு ஸரியான ப்ரமோதூதஹூத்தில் பணிபதிகிரியில் (திருப்பதி) கட்டப்பட்டிருக்கும் வேங்கடேசப்பெருமாள்கோவிலின் விமானத்தின் தகடுகளைத் தங்கமுலாம் கொடுத்து பரிஷ்காரம் செய்தார். கர்நாடக ராஜ்யம் தன் ஸ்வாதீனத்திலிருந்ததால் துலாபாரஉத்ஸவம்நடத்தித் தன்சரீரத்தினுடைய கனத்துக்குச்சரியான தங்கம் வெள்ளிகளை நிறுத்து வரதராஜஸ்வாமியினுடைய கைங்கர்யத்துக்கும் கல்யாணகோடிஎன்றும் சொல்லப்பட்ட தாயார் ஸன்னிதியின்விமானத்தைத்தங்கத்தகடுகளால் சக ஹூ 1536 ல் நிர்மாணம்செய்தார் க்ருஷ்ணதேவராயரால் நிர்மணம் செய்யப்பட் புண்யகோடி விமானம் முலாம்அழிந்து பழுதாய்விட்டபடியால் அதைமறுபடியும் முலாம் கொடுத்துப் புதுப்பித்தார். கோவிலின் உத்ஸவத்தின் பொருட்டுத் தங்கத்தினாலும் வெள்ளியினாலும் யானை, குதிரை, சேஷ, கருட, ஹநுமான், ஹம்ஸஸிம்ம, வாஹனங்களையும் பல்லக்கையும் செய்வித்துப் பெருமாளுக்குச் சில விலையுயர்ந்த திருவாபரணம் செய்து ஸமர்ப்பித்தார். ஒரு அக்ரஹாரம் கட்டிப்ராம்ஹணர்களுக்குத்தானம் செய்தார். தாதஸமுத்ரம் (அய்யங்

குளம்) என்று ஒருபெரியகுளம் வெட்டிவைத்தார். இவ்வளவும் கோவிலின்வடவண்டைச்சுவரிலிருக்கும் சிலாசாஸனங்களால் தெரியவருகிறது. தாதஸமுத்ரம் அல்லது அய்யன்குளம் என்று சொல்லப்பட்ட குளக்கரையில் ஒரு கோவில்கட்டி, அதில் சிறியதிருவடியை (ஹநுமாரை) ப்ரதிஷ்டைசெய்துஅந்த ஹநுமாரை உத்தேசித்து இருபது ச்லோகங்களடங்கிய ஒரு க்ரந்தம்செய்தார். இந்த க்ரந்தம் அருளாளப்பெருமாள் கோவிலின்தாயார் ஸந்நிதியின் வடவண்டை, தென்னண்டை, மேலண்டைச்சுவர்களில் வரையப்பட்டிருக்கின்றன. மேற்படிகோவிலின் கீழண்டைச்சுவரிலிருக்கும் ஒருசிலாசாஸனத்தில் இந்தஸ்வாமியினுடைய ப்ரசஸ்தி ச்லோகம்ஒன்று இருக்கிறது அதில் இவர் ஒவ்வொரு நாளும் நூறுகல்யாணம் செய்துவைத்ததாகத் தெரிகிறது - ஒருபெரியராஜ்யம் தன்ஸ்வாதீனத்திலிருந்தால் தன் இஷ்டப்படி கன்னிகாதானம் செய்து வந்திருக்கலாம். ஆகையால் தான் அவருக்கு அக்காலத்திலேயே கோடிகன்னிகாதானம் தாதாசாரியர் என்று ப்ரஸித்தி ஏற்பட்டிருந்தது.

மேல் சொல்லப்பட்ட சிலாசாஸநங்களிலிருந்து, இந்தத்தாதாசார்யர் ஒரு நல்லவித்வான்என்றும், செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள அநேக பெருமாள் கோவில்களுக்குஇவர் தர்மகர்த்தாவாக இருந்தார்என்றும், கர்நாடகராஜாக்களுக்குக் குருவாக இருந்தார்என்றும், கோவில்களுக்குக் கைங்கர்யங்கள் செய்து அநேகதானங்கள் செய்து வெகுப்ரஸத்தியை அடைந்தார், என்றும்தெரியவருகிறது. ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸம்பிரதாய ப்ரவசனத்தில் இவர் அந்வயித்ததாக மேல்குறித்த சிலா சாஸனங்களிலிருந்து கண்டுபிடிக்க முடியவில்லை. இவர் எவரென்றும் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யபரம்பரையில் எப்படிஸம்பந்தப்பட்டவர் என்றும் அடுத்தஸஞ்சிகையில் விசாரிப்போம் இதனுடன் இன்னும் சில குறிப்பிடக் கூடிய விஷயங்களும் இந்தச் சிலாசாஸநங்களிலிருந்து வெளியாகின்றன. அவையாவன:—

இந்தப்பேரருளாளர் கோவிலின் கீழண்டைசுவரிலுள்ள ஒரு சிலாசாஸனத்தில் வீரப்ரதாப அச்சுததேவ மஹாராயரால் கொஞ்சம் பொன் தானமும் பண்ணப்பட்டு அதிலிருந்து சாதுர்மாஸ்ய ஏகாதசிகளில் உத்ஸவம் செய்விக்கும்படிக்கும் கைசிக த்வாதசியன்று கைசிகபுராணம் வாசிக்கும்படிக்கும், அப்படி கைசிக புராணம் வாசித்துவந்த வண்சடகோபஜீயருக்குஒரு வஸ்திரம் கொடுக்கும்படிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது சகஹூ 1452 (கி. பி. 1530) விக்ருதிஹூ கர்காடகமீ பஹுள தசமி புதன்மை ஏற்பட்டது.

அதே கோவிலில் தென்பக்கத்திலுள்ள ஒரு சிலாசாஸனத்தில் மார்கழி௴த்தில் திருவத்யனமுடையவன் சிறப்பு, உலகமுண்டபெருவாயான் சிறப்பு என்றும் உத்ஸவங்களை நடத்திவர அம்மனப்ப அய்யங்காரின் பார்யையான நல்ல அம்மங்கார் என்பவளுக்கு ராமபத்ரபுரம் என்னும் ஊரில் ஒரு மான்யம் விடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு உத்ஸவங்களும் இன்னதென்று விமர்சிக்கத்தகுந்தன. சக௵ 1513 (கி. பி. 1591) கர௵ தனுர்௴, க்ருஷ்ண த்விதியை, செவ்வாய்க்கிழமை.

ஹஸ்திகிரியைச்சுற்றியிருக்கும் தென்பக்கம் மண்டபத்துக்கு அடிப்பக்கத்தில் ஒரு சிலாசாஸனத்திலிருந்து இளையாழ்வான் காளிங்கராயர் என்பவரால் நாயனார் எம்பெருமானார் விக்ரஹம் ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்டு, ஸ்ரீராமானுஜபாஷ்ய ப்ரவசனத்துக்கும் கோவில் மண்டபத்தில் சிலஜீயர்களுக்கு பிக்ஷை நடத்திவைக்க சிறுகோழி, பெருங்கோழி என்னும் க்ராமத்தின் வரிகளை உபயோகிக்கும்படி உத்திரவிடப்பட்டிருக்கிறது. இந்த தர்மம் த்ரிபுவன சக்ரவர்த்தியான கோனேரின்மை கொண்டான் என்றும் சக்ரவர்த்தியின் ஆளுகையில் எழுபத்தாறுவது திநத்தில் ஏற்பட்டது.

அருளாளப்பெருமாள் என்பது
தேபெருமாளுக்குப் பெயர்.

ஆர். ஸ்ரீனிவாஸராகவய்யங்கார்.

ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபை, நாகபட்டணம்

இவ்வருஷம் நாகபட்டணத்தில்நடந்த ஸ்ரீ தேசிகள் உத்ஸவத்துக்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ உப வித்வான் நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸங்களைக்கேட்டு அதிக ஆஸ்திக்யம் உண்டான அவ்வூரிலுள்ள எல்லாஉத்யோகஸ்தர்களும் இன்னும் பல ஆஸ்திகர்களும் சேர்ந்து ஒருஸ்ரீவைஷ்ணவ ஸித்நாந்த ஸபையை ஏற்படுத்தி அதை சென்னை, ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபையின் கிளைஸபையாக 16-9-23ல் ஏர்ப்பாடுசெய்து, அன்று வேதாந்ததீபிகைவரவழிக்கவேணும்என்றும்,பிரதியைச்ரவணம் வித்வான்களைக்கொண்டு உபந்யாஸம் செய்விக்க வேணும்என்று அவர்கள் தீர்மானித்தார்கள். இந்தஸபைக்கு கார்யதர்சி. ஸ்ரீ உப ஆர் க்ருஷ்ணமாசாரியர்ஸ்வாமி இந்த ஸபை மேல்மேலும் வ்ருத்தி அடைந்து ஸம்ப்ரதாயப்ரவசனம் செய்யவேணும்என்று ஸ்ரீய: பதியை ப்ரார்த்திக்கிறேன்.

கார்யதர்சி

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மானம்.

இந்த கைங்கர்யத்தை உத்தேசித்து மஸூலிபட்டணம் ராவ்ஸாஹிப் டி. எஸ் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் ஸ்வாமியால் ஒருபண்டு ஏர்ப்பாடுசெய்யப்பட்டு அதின் வ்ருத்யம்சத்திலிருந்து, குடுக்கப்பட்ட விஷயத்தில் எழுதி அனுப்பிக்கப்பட்டமுதல் தரமானவியாஸத்துக்கு ரூபாய்பதினைந்து ஸம்மானமாக கொடுத்து வித்யாபிவ்ருத்தியை அந்தஸ்வாமி செய்துவருவது எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம் - இவ்வருஷம், ஸ்ரீ சாந்தோக்யோபநிஷத்தில்ப்ரதிபாதிக்கப்பட்டவித்யைகளின் ஸ்வரூபம் 'ஆகாரம்' ஏன் அதுகளைதத்காலம் ஆசரிக்கமுடியாது என்றும் விஷயத்தைக்குறித்து வியாஸம்எழுதப்படவேணும். வியாஸம் எளிதானதமிழில்எழுதப்பட்டு, ப்ரமாணங்களை கீழ்குறிப்புகளாக குடுக்கவேணும். ஸம்ஸ்க்ருதத்தில் எழுதப்படும் ச்லோகங்களுக்கும் வாக்யங்களுக்கும் கூடவேதமிழில் அர்த்தமும் எழுதிவிடவேணும். அபேக்ஷகர்கள் இந்த விஷயத்தைக்குரித்துவியாஸம்எழுதி அதை வருகிற டிசம்பர் ௴ 5௳ க்குள் அடியேனுக்கு வந்துசேரும்படி அனுப்பவேணும். வ்யாஸத்துடன் அவரவர்கள் ஸொந்தமாய், பிறருடையஒத்தாசையன்றியே எழுதப்பட்டதுஎன்று தெரிவிக்கும்பொருட்டு, தங்களுடைய ஆசார்யனிடமிருந்தோ, அல்லது அவர்களிருக்கும்ஊரிலுள்ள பெரியமனுஷ்யர்களிடமிருந்தோ, 'இத்தவ்யாஸம் இவரால் பிறர் உதவியன்றி எழுதப்பட்டது' என்றுஒரு அத்தாக்ஷிபத்ரமும் அனுப்பப்படவேணும். வியாஸங்களை சோதித்து முதல்தரம்என்று தீர்மானிக்கப்படும் வியாஸத்துக்கு ரூ 15 இனும்

குடுக்கப்படும். இவ்வருஷம் டிசம்பர்மீ கடைசியில் கூடப்போகிற ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபையின் 13 வது வார்ஷிகஸங்கத்தின் அக்ராஸனாதிபதியால் இந்த ஸம்மானம் குடுக்கப்படும். இந்த ஸம்மானம் வார்ஷிக ஸங்கத்தில் குடுக்கப் போகிறபடியால் ஸம்மானம் பெறும் ஸ்வாமிக்கு விசேஷ கௌரவம் ஏற்படும். அந்த வியாஸமும் தீபிகையில் பிரசுரம் செய்யப்படும். ஆகையால் அபேக்ஷகர்கள் ச்ரத்தையாய் எழுதி அனுப்ப வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

காா்யதா்சி.

ஸம்வத்ஸரமுடிவில்

விக்ஞாபனம்.

இத்தீபிகை ஆரம்பித்து பதிமூன்று வருஷங்கள் இந்த ஸஞ்சிகையுடன் பூர்த்தி ஆயின. பதின்மூன்றுவது ஸம்புடத்தை ஒன்று சேர்த்து பைண்டு செய்துகொள்ள முகபத்ரத்தையும் அட்டவணையையும் அச்சிட்டு இத்துடன் அனுப்பியிருக்கிறது. இந்த தீபிகை இதற்குமுன் மணிபிரவாளநடையில் எழுதப்பட்டுவந்ததில் அநேகம் பேர்கள் அஸௌகர்யத்தை முறையிட்டுக்கொண்டதின்பேரில் ஸர்வ ஜனங்களுக்கும் உபயோகமாகும்படி எளிதான தமிழில், ப்ரமாணங்களை கீழ்குறிப்புகளாக குறித்து கொஞ்சம் ஸமாஸகாலமாய் பிரசுரம் செய்யப்பட்டுவருகிறது. நம்முடைய மதத்தின் அபிமானத்தால் ஸபையின் மெம்பர்களாக ஆகி ஒத்தாசை செய்து வந்த எல்லா ஸ்வாமிகளுக்கும் கேவலம் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஆஜ்ஞையை நிறைவேத்துவதே பரம ப்ரயோஜனமாய், அநந்யப்ரயோஜனர்களாய் தீபிகைக்கு விஷயப்ரதானம் செய்துவந்த எல்லா வித்வான்களுக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதையைவந்தன பூர்வகமாய் தெரிவிக்கிறேன். இந்தஒத்தாசையை ஒவ்வொருவரும் யாவஜ்ஜீவம் செய்து வரும்படிக்கும், இன்னும் தங்களுடைய ஸ்நேகிதர்களுக்குச்சொல்லி அவர்களையும் ஸபையின் மெம்பர்களாகப் சேரும்படிக்கும் யத்னம் செய்யும்படி அடியேன் வணக்கத்துடன் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். தீபிகை மிகவும் ச்ரமத்துடன் வளர்க்கப்பட்டு பதிமூன்று வயஸு ஆனதும் கொஞ்சம் சக்தி உண்டாகி இனி தன்னால் லோகத்துக்கு அதிக உபயோகம் உண்டாகவேணுமென்ற எண்ணம் அதற்கு ஜனித்து பதினாலாவது வருஷம் முதல் தான் மிகவும் லோகோபகாரமாயிருக்கும்படி முயர்ச்சியை செய்து வருவதை ஸ்வாமிகளுக்கு விக்ஞாபனம் செய்கிறேன்.

காா்யதா்சி.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை.

ஸம்புடம் - 13.

1922-1923

(துன்மதிஹூ - ருதிரோத்காரிஹூ.)

பத்ராதிபர்:—நடாதூர் ஸ்ரீனிவாஸாசாரியர் B. A. B. L.

காா்யதா்சி:—R. ஸ்ரீனிவாஸராகவ அய்யங்கார் M. A.

சென்னை:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையின்

காா்யதா்சியால் ப்ரசுரம் செய்யப்பட்டது.

சென்னை:

கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1923.

Copy-right Reserved.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அட்டவணை.

அந்தராதித்யவித்யை—திருமங்கலம் வடாதூர் நரஸிம்மாசாரியர். ... 180
ஆழ்வார்பக்தி:—ராகவய்யங்கார் 422
இரண்டாந்திருவந்தாதி:—வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் 313, 367, 407, 435
உபந்யாஸவிபரம்:—K. T. பார்த்தஸாரதி ஐயங்கார் 20-82-168-178-196-
எண்ணாயிரம் கிராமத்தின் ஓர் சிலாசாஸனம்:—ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 187
கடிதங்கள்:— 24-151-168-218
காமமும் மோக்ஷமே, மோக்ஷமும் காமமே:—ஸௌ. ஸ்ரீநிவாஸாசாரியர். 346-383
கார்யதரிசியின் விக்ஞாபனம்:— ... 77
சரண்புகுபா:—சகி. பார்த்தஸாரதி அய்யங்கார் ... 288
சிலசிலா சாஸனங்கள்:—ஆர். ஸ்ரீநிவாஸாராகவய்யங்கார், 214-249,449
தத்வத்ரயம்:—பைரோஜி ஸ்ரீநிவாஸாசாரியர் 86.
திருமங்கை ஆழ்வாரும் ஆராவமுதனும்:—காரப்பங்காடு, சிங்கராசாரியர் 431
தேவாலய மடமசோதா நமது கர்த்வ்யம்:—தி. த. ரங்காசாரியர் ... 274
தேவாலய மடமசோதாமுடிவு:—தி, த. ரங்காசாரியர் ... 225
பகவதவதார நிரூபணம்:—அ. திருவேங்கடாசாரியர். ... 301
பகவத்கீதைக்கு ஓர்புதிய உரை:—பத்ராதிபர் ... 141-159
பகவத் கீதைக்கு புதிய உரை ஓர் மறுமொழி:—வி. கே. ராமாநுஜாசார்யர் 261
பகவதபசாரம்:—டி. ராமஸ்வாமி அய்யங்கார் 168
பகவந்நாம வைபவ நிரூபணம்:—வேளுக்குடி சேஷாத்திரி ஐயங்கார் 32
பத்ராதிபரின் குறிப்புகள்:— 1-41-85-125-157-189-219-255-295-335-375-415
பரதேவதா பாரமார்த்தியம்:—வே. ஸ்ரீநிவாஸாசாரியர் 67
பன்னிரண்டாவது வார்ஷிகமஹாசங்கம்:—கோமடம். ஸ்ரீநிவாஸய்யங்கார் 110
புஸ்தக விமர்சம்:— 93-156–218-285
மதத்துக்கு திரும்புகிறவர்கள்:—M. S. கிருஷ்ணமாசாரியர் 69-96
மதஸ்தாபன மசோதா:—பத்ராதிபர் 103
மநுஸ்ம்ருதி:—புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர் 234
யாகம்:—T. ராமஸ்வாமி ஐயங்கார் 243
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை:—காரப்பங்காடு. சிங்கராசாரியர் 391

ஸ்யாஸங்கள்:—	39
வால்மீகியும் கம்பரும்:—ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்	247
விச்லேஷத்ரயதாத்பர்யம்:—க. வெ. கோபாலாசாரியர்	10-60-97
விசேஷ ஸமாசாரங்கள்:—	60-146
வேறுபத்ரிகை ஸங்க்ரஹம்:—	30-64
ஸ்ரீஅஹோபிலமடம்:—பத்ராதிபர்	253
ஸ்ரீதேசிகஸ்ய தேசிகத்வம்:—பண்டித பூஷணம் சேட்டலூர் நரஸிம்மாசாரியர்	24
ஸ்ரீநிகமாந்த மஹாதேசிக ஸம்ப்ரதாய ப்ரவசனஸபை திருக்கண்ணமங்கை:— தி. வெங்கிடாசாரியர்	94
ஸ்ரீபாத சரணாகதி:—நெடுந்தெரு. ஸ்ரீநிவாஸாசார்யர்	321
ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரஸங்க்ரஹம்:—பண்டிதபூஷணம் சேட்டலூர் நரஸிம்மாசாரியர்.	73-117-134-178-290-327-368-397-447
ஸ்ரீவிசிஷ்டாத்வைததத்வம்:—ஸ்ரீசைல சக்ரவர்த்தி	
ஸ்ரீவேதாந்ததேசிகன்ஸபை திருவஹீந்திரபுரம்:—அ. வேதாந்தாசாரியர்	17-444
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை:—கோயம்புத்தூர்	31
„ திருவாரூர்	395
„ நாகபட்டணம்	453
„ சென்னை	39-80-106
„ சேலம்	218
ஸ்ரீவைஷ்ணவ சங்கங்களின் ப்ரவர்த்திகள்:—பத்ராதிபர்	49
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமும் வைதிக மர்யாதை நிரைவும்:—வேளுக்குடி சேஷாத்ரி ஆசார்யர்	357-427
ஸதாசார நிஷ்கர்ஷம்:—காடந்தேத்தி கோபாலாசார்யர்	306-352
ஸம்வர்க்க வித்யையின் கதை:—வி. அநந்தாசார்யர்	239
ஸம்வத்ஸர முடிவில் விஜ்ஞாபனம்:—கார்யதரிசி	454
ஹிந்துமத ஸ்தாபன மசோதா:—தி. த. ரெங்காசார்யர்	205

186731

[illegible]

[illegible]

நிகமபரிமளம்.

இது இதுவரையில் வெளி வாராத சில அபூர்வ க்ரந்தங்களும் தேசிகனுடைய திவ்யஸூக்திகளுக்குத் தமிழில் மொழிபெயர்ப்பு. வ்யாக்யானத்துடன் கூட பத்து பாரங்கள் அல்லது 80-பக்கங்களடங்கிய மாதாந்தப்பத்திரிகை. இது ஆரம்பித்து 13-ஸஞ்சிகைகள் ஆயின. இப்பொழுது அச்சிடப்பட்டுவரும் க்ரந்தங்களின் விபரம்.

1. திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய பெரிய திருமொழிக்கு பெரிய பரகால ஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்ட நிகபரிமளம் என்கிற வ்யாக்யானமும், பாசுரங்களுக்கு பதவுரையும் ஷை வ்யாக்யானத்துக்கு எளிதான தமிழில் தாத்பர்யமும்.

2. ஸ்ரீ தேசிகப்ரபந்தம்:—பாசுரங்களுக்குப் பதவுரையும் விஸ்தாரமான வ்யாக்யானமும் கூடியது. இதுவரை நவரத்நமாலை, திருமந்திரச்சுருக்கு, த்வயச்சுருக்கு, சரமச்லோகச்சுருக்கு, அர்த்த பஞ்சகம், வெளியாகியிருக்கின்றன.

3. ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த சில்லறை ரஹஸ்யங்கள். இதில் ஸ்ரீமத்ஸம்ப்ரதாய பரிசுத்தி, ஸ்ரீமத் தத்வபதவி, ஸ்ரீமத் ரஹஸ்யபதவி, ஸ்ரீமத் தத்வநவநீதம், ஸ்ரீமத் தத்வமாத்ருகை, ஸ்ரீமத் ரஹஸ்யமாத்ருகை, ஸ்ரீமத் தத்வஸந்தேசம், ஸ்ரீமத் ரஹஸ்யஸந்தேசம் இவைகள் வெளியாகியிருக்கின்றன.

4. ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்:—ஒவ்வொரு பக்கத்திலும் மூலம் மேலும், அர்த்தம் கீழுமாக அச்சிடப்பட்டு வருகிறது.

எல்லாம் எளிதான தமிழில் எழுதப்பட்டு எல்லோருக்கும் உபயோகமாகும்படி சேட்டலூர் வித்வான் பண்டிதபூஷணம் நரஸிம்மாசாரியரால் மொழிபெயர்க்கப்பட்டு நிகமபரிமளம் ஆபீஸ் மானேஜரால் ப்ரசுரம் செய்யப்பட்டு வருகிறது. வருஷச்சந்தா ரூபாய் ஐந்து. தபால்கூலிவேறு, ஒவ்வொரு ஸஞ்சிகையின் விலை அணா 8. வேண்டியவர்கள் வேதாந்ததீபிகை ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். ஆஸ்திகர்கள் இதை வாங்கி வாசித்து ஆதரித்தால் ஸ்ரீ ஸ்வாமிசெய்யும் உபகாரத்துக்கு நாம் க்ருதஜ்ஞதையைக் காட்டினதாகும்.

விளம்பரம்.

ஸ்ரீ சததூஷணீ.

[தமிழ்மொழி பெயர்ப்புடன்.]

ஆறுவாதங்கள் வெளியாய் விட்டன.

ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகனால் அருளிச்செய்யப்பட்ட இக்க்ரந்தம் அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்கி மூலத்தைத் தடித்த க்ரந்தாக்ஷரத்திலும் திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டித பூஷணம் ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின் தமிழ் மொழிபெயர்ப்புடனும் பாரிபாஷிகமான பதங்களுக்கு எளிதான தமிழ் நடையில் ஒரு டிப்பணியுடனும் அச்சிட்டு ஸ்ரீ தேசிகனுடைய திருவவதார தினமாகிய ச்ரவண நக்ஷத்திரத்தன்று ஒரு வாதத்திற்குக் குறையாமல் ப்ரதிமாதமும் ஸஞ்சிகைரூபமாக வெளியிடப்படுகிறது.

இந்த க்ரந்தம் 66 வாதங்கள் அடங்கியது. இது இதுவரையில் முழுவதும் அச்சிட்டு வெளியிடப்படவில்லை. இப்படிப்பட்ட க்ரந்தங்கள் விற்பனையாவது ச்ரமமாதலால் ஸம்ப்ரதாயத்தில் ஆஸ்தையுள்ள ப்ரபுக்கள் முன்வந்து விசேஷ த்ரவ்யஸஹாயம் செய்து இந்த எங்களுடைய ஆரம்பத்தை பூர்த்தியாகும்படி செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

ஒரு வாதம் அச்சிட எல்லாச்செலவும் உள்படரூபாய் 30 ஸராஸரியாக ஆகிறது. இவ்வளவு ஸகாயம் செய்பவர்களுக்கு மேல்அச்சிடப்படும் ஒவ்வொரு வாதத்திலும் மூன்று பிரதிகள் கொடுக்கப்படும். முன் பணம் ரூபாய் 12 கொடுப்பவர்களுக்கு ஒவ்வொரு வாதத்திலும் ஒரு ப்ரதி கொடுக்கப்படும். மாதஸஞ்சிகைகளாக கொடுப்பதினால் நஷ்டம் ஏற்படுகிறபடியினால் தனித்தனியாக அவைகள் கொடுக்கப்படா. ஆனாலும் வாங்குகிறவர்களின் ஸௌகரியத்தை உத்தேசித்து இந்த முன் பணமான ரூபாய் 12 ஐயும் நான்கு தடவைகளில் கொடுக்கலாம். மற்ற விவரங்களுக்குக் கீழ்க் குறிப்பிட்டிருக்கும் விலாஸத்திற்கு எழுதலாம்.

காரியதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,

புரசைவாக்கம், வேப்பேரி போஸ்டு,

[illegible] ஆன சென்னை,